பொதுசன நூலகம்
3 MAR 2005

Registered as a NewsPaper


விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | மாசி-19 | 03-03-2005 | வியாழக்கிழமை | ஓசை 13



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987







படப்பிடிப்புகள்:- ஆன்சிலின், தயாபரன்
(மேலும் படங்கள் உள்ளே....)

- சந்திரிகா அரசினைக் கண்டித்து யாழ்.இல் -

# அலையென மக்கள் திரண்ட மாபெரும் கண்டனப் பேரணி!

## ஐ.நா.செயலாளர், சனாதிபதி ஆகியோருக்கு மகஜர்

(யாழ்ப்பாணச் செய்தியாளர்கள்)

**சிறிலங்கா அரசாங்கத்தின் அராஜகப் போக்கைக் கண்டித்து நேற்று யாழ்.இல் அலையெனத் திரண்டபல்லாயிரக்கணக்கான மக்களின் பிரமாண்டமான கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது. நிராயுத பாணிகளாக அரசியல்பணிகளில் இடம்பெறும் அரசியல் போராளிகளின் படுகொலையினைக் கண்டித்தும், சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது நிவாரணப் பணிகள் புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்தும், இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் உடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் இப் பிரமாண்ட பேரணி இடம்பெற்றது.**

நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஓர் அணியினரும்,யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலிருந்து ஒரு அணியினரும், கோயில் வீதியில் இருந்து ஓர் அணியினரும் மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து மக்கள் பேரணியாகப் புறப்பட்டனர்.

பல்கலைக்கழக முன்றலில் இருந்து புறப்பட்ட இப் பேரணியில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரன்,

(11 ஆம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கிச்சூடு நடத்தியவருக்கு இராணுவத்தினரின் தொடர்பு உண்டு

## — சம்பவத்தில் காயமடைந்த குவேனி

தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடனேயே நடந்துள்ளதாக இந்தச் சம்பவத்தில் காயமடைந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் போராளி அகநிலா ஆகியோர் மீண்டும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மகளிர்அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி கூறியுள்ளதாவது; சம்பவ தினம் அக்கரைபற்று விசேட அதிரடிப்படை இராணுவ முகாம் வழியாகப் பயணம் செய்தபோது வழமையான பதிவுகள் அங்கு இடம்பெறவில்லை. இந்த முகாமைக் கடந்து சென்ற சமயம் சற்றுத் தொலைவில் உந்துருளியை நிறுத்தி விட்டு அந்த இடத்

(11 ஆம் பக்கம் பார்க்க)

—பெண்போராளிகள் மீதான தாக்குதலைக் கண்டித்து—

# போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கிளிநொச்சியில் மகஜர் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மட்டு.அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர் ஒன்றினைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ளது.

மேற்படி மகஜரினை நேற்று மாலை 4.30 மணிளவில் கிளிநொச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

கரடியனாற்றுப் பகுதியில் கடந்த மாதம் 24 ஆம் திகதி தவறுதலான விபத்தொன்றின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். வீரவேங்கை - கனியன்பு (சீனித்தம்பி - அழகானந்தி பழைய சந்தை வீதி,சித்தாண்டி மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# மருத்துவ பீட மாணவர் எதிர்ப்புப் போராட்டம்

“தனியார் மருத்துவக் கல்லூரியொன்றினை இலங்கையில் ஆரம்பிப்பதனை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டமொன்றை நேற்று நடாத்தினர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணர்வர்கள் அனைவரும் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்ததுடன்,திருநெல்வேலி சந்திப் பகுதியினில் ஒன்று திரண்டு இவ் எதிர்ப்புப் போராட்டத்தினில் ஈடுபட்டிருந்தனர். அரசிற்கெதிரான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல்கள் தொடரின் யுத்த நிறுத்தம் பாரதூரமான நெருக்கடியைச் சந்திக்கும்!

## - சந்திரிகாவின் ஆணைக்குழு வெறும் கண்துடைப்பு- சு.ப. தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

சனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே இது. யதார்த்த பூர்வமானதென நாம் நம்பவில்லை. இதே வேளை விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமேயானால் நிச்சயமாக அது யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்துவதாகவே இருக்கும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

பி.பி.ஸி தமிழோசைக்கு நேற்று அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்: பெண் போராளிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க சனாதிபதியால் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுக்கள் நியமிப்பதில் எங்களுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் கடந்த காலங்களில் சந்திரிகாவினுடைய ஆட்சிக்காலத்தில் இங்கே நடைபெற்ற பல படுகொலைகள் சம்பந்தமாகவும், நடைபெற்ற நிகழ்வுகள் சம்பந்தமாகவும் பலமுறை ஆணைக் குழுக்கள் -ஆணையகங்கள் நியமிக்கப்பட்ட வரலாறு நிறையவே இருக்கின்றது. இதற்கு இப்படியான ஓர் ஆணைக் குழுவை நியமித்து நீதி வழங்கப்படுமென்பதில் எந்தவித நம்பிக்கையும் இல்லை. இதை வெறும் கண்துடைப்பாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

நாங்கள் நோர்வே அனுசரணையாளர்களூடாகவும் கண்காணிப்புக்குழுக்களூடாகவும் கௌசல்யன் கொலை செய்யப்பட்டது முதல் அங்கு நடைபெற்ற சகல கொலைகளுக்கும் காரணமானவர்களைச் சுட்டிக்காட்டி வருகின்றோம். ஆனால் இதுவரை அவர்கள் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஏனெனில் இந்தப் படுகொலை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அங்காடி வியாபாரிகளின் பிரச்சினை குறித்து ஆராய்வு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அங்காடி வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் வவுனியா நகரசபை செயலாளர் சரவணபவன், வவுனியாஉள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் சி. அச்சுதன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் உட்பட அங்காடி வியாபாரிகள் பலரும்கலந்து கொண்டனர் (10)


## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

பரந்தன்-பூநகரி வீதியின் தெற்குப்புறமாக (பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அண்மையில்) நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 4 1/2ஏக்கர்வயல்க்காணி விற்பனைக்குள்ளது. அரிசிஆலை, வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பானது. தொடர்பு T.P 0112508992,021-2285092 தகவல் :- க.பத்மநாதன் (5758)



## AAT கற்கைநெறி மாணவர்களுக்கான அறிவித்தல்

தமிழர் புனர்வாழ்வுக் கழக முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் AAT கற்கை நெறி கட்டம் I இற்கான தொடக்க நாள் நிகழ்வுகள் 05.03.2005 பி.ப 2.00 மணிக்கு முகாமைத்துவக் கல்லூரி கிளிநொச்சியில் இடம்பெறும் என்பதனையும், கட்டம் II இற்கான விரிவுரைகளும் அதேதினத்தில் ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
முகாமைத்துவக்கல்லூரி,
கிளிநொச்சி.

(சி.11375)

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்



**லெப். கேணல் இம்ரான்**
**சங்கரப்பிள்ளை சதானந்தன்**
**(டிக்கி)**

**லெப். கேணல் பாண்டியன்**
**செல்லத்துரை சிறிதரன்**
**(குட்டி)**

20–01–1961 முத்தாக 23–03–1960

03–03–1988 வித்தாக 09–01–1988

**முன்னாள் யாழ். மாவட்ட தளபதிகள்**
**பாண்டியன் வீதி-பிரம்படிலேன் கொக்குவில் -யாழ்.**

ஆகாய கங்கை கண்ணில் பாயுது
ஆனந்த வடிகால் உம்மைத் தேடுது
ஓயாது ஓயாது பகை அழித்தவர்
உரிமைக் குரலாய் இங்கு விதையானீர்
தமிழீழ மண் மீது பூவாய் மலர்ந்தீர்
தமிழ் மண்ணை மீட்பதனில் ஒன்றாய் விளாந்தீர்

களமாடும் போதிலும் ஒன்றாய் இருந்தீர்
பலம் சேர்க்கும் போதிலும் நன்றாய் உழைத்தீர்
தலைவரின் காப்பரனின் தூண்கள் ஆனீர்
தமிழீழம் மீட்பதனில் கூடி ஆடினீர்
மீண்டும் வருவீர் ஈழம் காண்பீர்
ஈழக் கொடியில் நீங்கள் ஆடுவீர்.

த. முகவரி, ஆலடி,
உடையார் கட்டு.

(சி.11373)

தகவல்:-
குடும்பத்தினர்.

## சாவு அறிவித்தல்



### திரு.சின்னத்துரை கந்தசாமி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மணற் குடியிருப்பு, முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை கந்தசாமி அவர்கள் 02.03.2005 நேற்று புதுக்குடியிருப்பில் காலமானார். இவர் திரவியத்தின் அன்புக் கணவரும், பேரின்பநாதன் (மாவட்டப் பதிவாளர் அலுவலகம்- முல்லைத்தீவு), சித்திரா, திருக்கேதீஸ்வரி (நீர்ப்பாசனப் பொறியியலாளர் பணிமனை முத்துஐயன் கட்டு) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஆறுமுகம் (உரிமையாளர் ரெலிக்கோணர்புடவைமாளிகை-புதுக்குடியிருப்பு), போல்ராஜ்குமார், இரஞ்சிதவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீஷ்ணா, மிதுர்ஷா, மாணவிகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சுபவர்ஷணா, சஞ்ஜயன், ரதிவர்ணன், சத்யா, மாணவி-மந்துவில், அரசரத்தினம் வித்தியாலயம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 03.03.2005 வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் உள்ள அவரது மகளின் (ரெலிக்கோணர்), இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயாணத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(சி.11539)

தகவல்:- பேரின்பநாதன் மகன்,
(புதுக்குடியிருப்பு)

## 09 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 16 - 06 - 1975



தாயக மண்ணில் 03 - 03 - 1996

**தமிழீழ காவல்துறை**
**தலைமைக்காவலர் சிவதீபன்**
**குலவீரசிங்கம் சிவதீபன்**

அல்வாய் மேற்கு,
அல்வாய்,
யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் 20 - 07 - 1974



தாயக மண்ணில் 03 - 03 - 1996

**தமிழீழ காவல்துறை**
**தலைமைக்காவலர் சிவகுமார்**
**பேரம்பலம் சிவகுமார்**

அராலி மத்தி,
ஊரத்தி,
யாழ்ப்பாணம்

தாயின் மடியில் 10 - 05 - 1977




தாயக மண்ணில் 03 - 03 - 1996

**தமிழீழ காவல்துறை**
**தலைமைக்காவலர் காண்டீபன்**
**சண்முகநாதன் காண்டீபன்**

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

சூரியகதிர்-1 இராணுவ நடவடிக்கையின்போது நாவற்குழியில் கடமையிலீடுபட்டிருந்த சமயம் முகாம் மீதான சிறிலங்கா இராணுவத்தின் எறிகணை வீச்சின் போது 03.03.1996 இல் வீரச்சாவடைந்தனர்.



தாயின் மடியில் 10 - 03 - 1963

தாயக மண்ணில் 08 - 02 - 1996

**தமிழீழ காவல்துறை**
**உபபரிசோதகர் பாஸ்கரன்**
**துரைசிங்கம் பாஸ்கரன்**

கண்டாவளை,
கிளிநொச்சி.

*கொடிகாமத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை 08.02.1996 அன்று விபத்தில் சாவடைந்தார்.*

தேசியத் தலைவன் வழியில் பணியில் உமை ஆக்கினீர்
தேசமக்கள் வாழ்வில் இருளகற்றி ஒளி ஏற்றினீர்
சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினீர்- தேசக்
கட்டுமானத்தின் அத்திவாரமாகி வழிகாட்டினீர்

**இம் மாவீரர்களுக்கும், இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களிற்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

(5764)

தமிழீழ காவல்துறையினர்.

# அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தவறுவது யுத்த நிறுத்தம் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது!

## -யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா அரசாங்கமானது தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தவறுவதானது. விடுதலைப் புலிகளைப் பொறுமையின் எல்லைக்கே தள்ளி விட்டுள்ளதுடன், யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிந்து விடுமோ என்ற அச்சத்தை மக்களிடம் உருவாக்கியுள்ளது.**

இவ்வாறு நேற்று யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற மாபெரும் கண்டனப் பேரணியின் முடிவில் அரசாங்கத்திற்கு , சர்வதேச சமூகத்திற்கும் யாழ்.மாவட்டபொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் இடம் பெற்ற பல்வேறு இராணுவச் சீண்டுதல்களுக்கு மத்தியிலும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் தாக்குப்பிடித்தது ஆறுதல் அளிப்பதாகவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் நோக்கமும் இலக்கும் சிறிலங்கா அரசினால் நிறைவேற்றப்படவில்லையென்பது விரக்தி அளிப்பதும் ஏமாற்றம் அளிப்பதுமாகும்.

இயல்பு நிலை தோற்றுவிக்கப்படாமையும் இடம்பெயர்ந்தவர்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளக்குடியேற உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அனுமதி மறுக்கப்பட்டமை என்பது பற்றியும் அடிப்படை மனித உரிமை மறுப்பு தொடர்பாகவும், மீன்பிடி மற்றும் விவசாயம் சார்ந்த மக்கள் தமது தொழில்களை மேற்கொள்ள அனுமதி மறுப்பது பற்றியும் வடக்கு-கிழக்கு வாழ்மக்கள் தொடர்ந்து குரல் எழுபபி வந்துள்ளனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கம் பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்மொழிவுகள் இழுத்தடிக்கப்பட்டும் தாமதப்படுத்தப்பட்டும் வருகின்றன.

அதே போல சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளைக் கையாள ஒரு மத்திய கட்டமைப்பு உருவாக்கப்படல் என்ற முன்மொழிவும் இங்குமங்குமாக இழுத்தடிக்கப்படுகின்றது.

சர்வதேச சமூகத்தினால் நாட்டுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகள் கையாளப்படுவதில் வெளிப்படைத்தன்மை முழுமையாக இல்லையென்பதை கவலையுடன் குறிப்பிடவேண்டும். சிறிலங்கா அரச திறைசேரியை வந்தடைந்த நிதியுதவிகள் வடக்கு-கிழக்குமக்களை வந்தடையவில்லையென துணிந்துகூற முடியும்.

போராளிகளையும் உண்மையாக நாட்டுப்பற்றாளர்களையும் தளத்தில் நிலவும் உண்மை நிலையை உலகிற்கு வெளிக்காட்டும் ஊடகவியலாளர்களையும் இலக்கு வைத்த தாக்குதல்கள் சமாதான நடைமுறைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் செயல்களாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சிறிலங்கா அரசு தவறுவது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையும் பொறுமையின் எல்லைக்கு தள்ளிவிட்டுள்ளதால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிந்து விடுமோ என்ற அச்சம் யாழ்.மாவட்ட மக்களிடம் குறிப்பாகவும் வடக்கு-கிழக்கு மக்களிடம் பொதுவாகவும் உருவாகியுள்ளது.

எனவே சர்வதேச சமூகம் முழு நிலைமையையும் மீளாய்வு செய்து யுத்த நிறுத்த ஒப்பந்த முறிவு இடம் பெறுவதற்கு முன்பு-சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டுமென இந்தப் பேரணியில் கலந்து கொள்ளும் நாம் வேண்டி நிற்கின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா,41,33,27,28,36)

## யு.என்.டி.பி 2 மில்லியன் ஒதுக்கீடு

(வடமராட்சி)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மணற்காடு மற்றும் பொற்பதி ஆகிய கிராமங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மணற்காட்டைப் புனரமைக்க ஒரு மில்லியன் ரூபாவும், பொற்பதியைப் புனரமைக்க ஒரு மில்லியன் ரூபாவுமாக மொத்தம் இரு மில்லியன் ரூபாக்களை இவ்வமைப்பினர் ஒதுக்கியுள்ளனர். (33)

*-பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்-*

# யானைக்கால் நோயைத்தடுக்க உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் யானைக்கால் நோயை பரவவிடாது தடுக்கும் நடவடிக்கைகளில் உலக சுகாதார ஸ்தாபனம் ஈடுபடவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் யானைக்கால் நோய்பரவக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளமையைக்கவனத்தில் கொண்டே உலக சுகாதார ஸ்தாபனம் இதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கத்தைத் தவிர்த்தல் தொற்றுநீக்கிகளை விசுறுதல், இரத்தப்பரிசோதனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (33)

# பிரதேச சபை அபிவிருத்தி வேலைத் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குக

## –யாழ் அரச அதிபர் கே. கணேஷ்அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் குறித்த முன்மொழிவுகளை உடனடியாக யாழ். அரச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

அத்துடன் இம் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதில் பிரதேச செயலாளர்களும் அதிக கவனம் செலுத்துமாறும் அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுடான உலக உணவுத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான அவசி யத்தை வலியுறுத்தியே அரச அதிபர் இவ் அறிவிப்பை விடுத்துள்ளார். (33)



வடமராட்சியில் இறங்குதுறைகள் மற்றும் முருகைக்கல் அணைஎன்பவற்றை இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் புனரமைக்கும் பணி இடம் பெறுகின்றது.

(படப்பிடிப்பு:- தயாபரன்)

# வன்னிப் பொன்னாங்காணிக்கு சந்தையில் அதிக வரவேற்பு

யாழ். வலிகாமம் பிரதேசத்தில் இம் முறை மேற்கொள்ளப்பட்ட பொன்னாங்காணிப் பயிர்ச்செய்கை அதிக விளைச்சலைத் தந்திருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு முதற் தடவையாக செய்கை பண்ணப்பட்ட புதிய இன பொன்னாங்காணிக் கீரையே இவ்வாறு அதிக விளைச்சலைத் தந்திருப்பதாகவும் தெரிகிறது.

இப்புதிய இன பொன்னாங்காணிக் கீரைக்கு சந்தையிலும், அதிக வரவேற்பிருப்பதாக தெரியவருகின்றது. (33)

# மலசலகூடம் அமைக்க காசோலைகளைப் பெறுக

(சாவகச்சேரி)

மலசலகூட அமைப்பு மானியங்களுக்காக விண்ணப்பித்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தவர்களுக்கான மானியக் கொடுப்பனவுக்காசோலைகள் வந்துசேர்ந்துள்ளன.

இம்மானியக் கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பித்தவர்கள் மீசாலை ஐயா கடையடியில் உள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப புதிய நியமனங்கள் போதாது

## யாழ்.கல்வித்திணைக்கள வட்டாரங்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் சித்தி பெற்றவர்களைப் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுசெய்து அரசினால் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்கள் குறித்து யாழ். மாவட்ட கல்வித்திணைக்கள அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேற்படி போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவான ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு இம்மாதம் முதல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் யாழ்.குடாநாட்டிற்கு முதல் கட்டமாக சுமார் 100 ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் யாழ்ப்பாணம்,வலிகாமம்,தென்மராட்சி ஆகிய மூன்று கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கென ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் தலா மூன்று ஆசிரியர்கள் வீதமே நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஏனைய கல்விவலயங்களான தீவகக் கல்வி வலயத்திற்கு 45 ஆசிரிய நியமனங்களும் வடமராட்சி கல்வி வலயத்திற்கு 46 ஆசிரிய நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்கள் மூலம் இம்மாவட்டத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளமையைச் சுட்டிக்காட்டியே இவ்வாறு கல்வித்திணைக்கள அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (33)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியின் வருடாந்த அழகெழல் போட்டிகள் இம்மாதம் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதில் சித்திரம், நாடகம் ஆகிவற்றிற்கான போட்டிகள் 25 ஆம் திகதியிலும் இசை, நடனம் ஆகிய போட்டிகள் 26 ஆம் திகதியும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 19 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத் துறையினர் அறிவித்துள்ளனர். (33)

# கால்நடை வைத்திய அதிகாரி உப அலுவலகம் ஆரம்பம்

கோண்டாவில் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் உப அலுவலகம் ஒன்று அரியாலை கமநல சேவைகள் அலுவலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இங்கு பிரதி செவ்வாய், வியாழன் தோறும் மாலை இரண்டு மணி தொடக்கம் நான்கு மணி வரையில் கால்நடைகளுக்கான பராமரிப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி சம்பந்தமான சேவைகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

## ஒக்ஸ்பாம் உதவி

(வடமராட்சி)

யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதி யைச் சேர்ந்த 50 மீனவக் குடும்பங்களுக்கு "ஒக்ஸ்பாம்" அமைப்பினரால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மீனவர்களது தொழில் மேம்பாடுகளைக் கவனத்திற் கொண்டே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

# வடக்கு கிழக்கை தொடர்ந்து புறக்கணிப்பின் போராட நிர்ப்பந்திக்கப்படுவோம்

## திருமலையில் பா. உறுப்பினர் துரைரட்ணசிங்கம் அரசுக்கு எச்சரிக்கை

(திருகோணமலை)

**வடக்கு கிழக்கின் அபிவிருத்தியை அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்து வருமானால் மக்கள் சக்திப் போராட்டமொன்றை நடத்த வேண்டிய நிலைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்படுவோமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**


கடந்த திங்கட்கிழமை மாலை உப்புவெளி பள்ளத்தோட்டம் பகுதியில் திருமலை மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தினாதரவில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழிலுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்குபற்றிப் பேசும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்க ரெக் நிறுவனம் வழங்கிய நிதியுதவியுடன் திருமலை மாவட்டப் பொருண்மிய மதியுரையகம், கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் முதலாவது கட்டமாக பள்ளத்தோட்டக் கிராம மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியது. நிகழ்வை முதலாவது தொகுதி உபகரணத்தை வழங்கிப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆரம்பித்து வைத்தார். நிகழ்விற்கு பொருண்மிய மதியுரையக திருமலை மாவட்ட இணைப்பாளர் ந.கலை சங்கர் தலைமை வகித்தார்.

"கடற்கோளினால் வடக்கு கிழக்கில் 71 சதவீத பாதிப்பு ஏற்பட்டுள்ளதென்று சர்வதேச அமைப்புக்கள் மதிப்பிட்டுள்ளன. குறைந்தளவு பாதிப்புற்ற தென்பகுதிக்கும் நிவாரணம் வழங்கப்படத்தான் வேண்டும். அதற்காக கூடுதல் பாதிப்பிற்குள்ளான வடக்கு கிழக்கை அரசாங்கம் புறக்கணிக்க முடியாது. எமக்குரியது எமக்குக் கிடைத்தேயாக வேண்டும். தமிழர் பிரதேசம் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவது நாடு சுதந்திரம் பெற்ற 1947 லிலேயே ஆரம்பித்துவிட்டது. பின்னர் யுத்த காலத்திலும், இப் புறக்கணிப்புத் தொடர்ந்தது. கடற்கோள் (சுனாமி) வந்த பின்னரான அபிவிருத்திப் பணிகளிலும் இப் புறக்கணிப்பு தொடர்கின்றது" என்று துரைரட்ணசிங்கம் கூறினார்.

கடற்கோள் வந்தவுடன் நாட்டில் இன ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான சூழல் உருவானது. இந்த நம்பிக்கையுடன் மூவின மக்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட்டு வந்தனர். ஆனால் ஆட்சியிலிருப்போர் அந்த ஒற்றுமை வாய்ப்பை சீர் குலைத்து வருகின்றனர். வடக்கு கிழக்கை அரசு திட்டமிட்ட முறையில் புறக்கணித்து வருவது இன்று சர்வதேச ரீதியாக உணரப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் இது குறித்து ஆணித்தரமாக சிந்தித்துச் செயற்படுவதற்குத் தயாராகியுள்ளது என்றும் துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இனிமேலும் புறக்கணிப்பு தொடர நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். எமது மக்களுக்கு உரியது கிடைக்க உறுதி செய்வோம். அதற்காக மக்கள் சக்தியைத் திரட்டி போராடத் தயங்க மாட்டோம் என்றும் துரைரட்ணசிங்கம் தெரிவித்தார். திருமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எஸ். யேசுதாஸன் உட்பட பலர் பேசினர். (25)




வீதி ஓரங்களில் எரியூட்டப்பட்ட உமிச்சாம்பல் கொட்டப்பட்டு வருவதனால் அவ் வீதியால் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதனை அவதானிக்க முடிகின்றது. கிளிநொச்சி டிப்போச் சந்தி - கோணாவில் வீதிக்கருகாமையில் மேற்படி உமிச்சாம்பல் கொட்டப்பட்டுள்ளதனை படத்தில் காண்க.

(படம். சோதி)



கிளிநொச்சி முருகானந்த மகாவித்தியாலயத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ் அவர்கள் தரம் 10 மாணவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம்.

## கோழி வளர்ப்போருக்கு த.பொ.மே. நிறுவனம் உதவி



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், உணவு விவசாய நிறுவனமும் இணைந்து கோழி வளர்ப்பில் ஈடுபடும் குடும்பங்களுக்கு கோழிக் கூட்டுக்கான வலைகளை வழங்கி வருகின்றன.

இந்த வகையில் நேற்று முன்தினம் ஜெயந்திநகர் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் வைத்து மேற்படி நிறுவனத்தினரால் ஜெயந்திநகர் கிராமத்தைச் சேர்ந்த 216 பயனாளிகளுக்கு கோழிக் கூட்டுக்கான வலைகளை வழங்கினர்.

இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் சி.சிவனேசன், உணவு, விவசாய நிறுவன கிளி.மாவட்ட இணைப்பாளர் மா. செல்வராசா, உதவியாளர் தேவராசா கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வடக்கு கிழக்கு மா.சபை நிர்வாகத்தில் மார்ச் 1 முதல் பலருக்கு மாற்றங்கள்

(திருகோணமலை)


வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக பதவி வகித்து வந்த பி.எம்.எஸ். இரத்தினாயக்கா பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக சபையின் பிராந்திய ஆணையாளராக அம்பாறையில் பணியாற்றியவரும் முன்னாள் அரச அதிபருமான எல். எஸ். ஸி சிறிவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சின் செயலாளராக டாக்டர் சக்திவேல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இப் பதவியை வகித்து வந்த வி.பி.பாலசிங்கம் மீண்டும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவியை ஏற்றுள்ளார்.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக கே.சபாபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இப் பதவியை வகித்து வந்த செல்வி டி.டி விஜயலட்சுமி உள்ளூராட்சி சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபையின் மன்னார் வவுனியா பிராந்திய ஆணையாளராகப் பணிபுரியும் ஏ.கே பத்மநாதன் மாகாண பொது நிர்வாக அமைச்சின் புதிய செயலாளராகவும் தற்போது அப் பதவியிலிருக்கும் திருமதி. கமலா சிவசிதம்பரம் வடமாகாணத்தின் பிராந்திய ஆணையாளராகவும் நியமிக்கப்படலாம் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (25)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது கல்வியை மேற்கொள்ள முடியாமல் இருந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு உதவும் முகமாக அவர்களுக்கான பாடக் குறிப்புப் புத்தகங்களைப் பிரதி செய்து வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி புத்தகப் பிரதிகளை முல்லை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் அவர்கள் வித்தியாலய ஆசிரியர் மோகன் ஜீவனிடம் கையளித்தார். இப் பாடக் குறிப்புப் புத்தகங்களை யுனிசெப்பின் அனுசரணையுடன் தமிழீழ மாணவர் அமைப்பினர் தயாரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

### – கிளி. கரைச்சிப் பிரதேசத்தில் –
## நடமாடும் சேவை மூலம் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத் தினரால் நடமாடும் சேவைகள் மூலம் காணி அனுமதிப்பத்திரம் அற்ற காணி உரிமையாளர்களுக்கு தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்குவது மற்றும் தற்காலிக காணி அனுமதிப் பத்திரத்தினை நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் இன்று கரைச்சிப் பிரதேச செயலக அக்கராயன் பணிமனையில் வைத்து அக்கராயன் பிரதேச காணி அனு மதிப்பத்திரமற்ற காணி உரிமையாளர்களுக்கு தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் மற்றும் தற்காலிகக்காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

அதேபோன்று நாளை உதய நகர் கிழக்கு, மேற்கு கிராம மக்களுக்கான மேற்படி காணி நடவடிக்கைகள் உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் வைத்து அன்றைய தினம் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது என கரைச்சி பி[illegible] செயலக காணி உத்தியோக[illegible] ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளா (சோ)

## அனைத்துலக பெண்கள் தின முன்னோடிக் கலந்துரையாடல்

(உடையார் கட்டு)

அனைத்துலக பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முன்னோடி கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் மாதர் சங்கத்தினர், கிராம அலுவலர்கள், போராளிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இக் கலந்துரையாடலின் போது புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இம் மாதம் எட்டாம் திகதி அனைத்துலக பெண்கள் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. (19)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் பணிபுரியும் தொண்டர்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கொடுப்பனவுகளற்ற நிலையில் பணி புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மேற்படி பிரச்சினை குறித்து இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. பி.மா.சு.சே பணிமனையில் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பி.மா.சு. சே பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# மலேசியாவில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டினரை அகற்றும் காலக்கெடு முடிந்தது!

## பெருமளவானோரைப் பிடிக்க அதிரடி நடவடிக்கை

(கோலாலம்பூர்)


**நான்குமாத பொதுமன்னிப்புக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சட்ட விரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டினரை மலேசியப் பொலிசாரும், குடியேற்ற அதிகாரிகளும் கைது செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். வெளிநாட்டினரைப் பிடிக்க நாடு முழுவதும் அதிரடிச் சோதனைகளும் ஆரம்பித்துள்ளன.**

மலேசியாவில் பெருமளவு வெளிநாட்டினர் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளனர். தோட்ட வேலை, கட்டுமானத் தொழில், தொழிற்சாலைகள், விடுதிகள் மற்றும் வீட்டு வேலைகளை அவர்கள் செய்து வருகின்றனர். மலேசியாவின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இவர்களால் பெரும் தொல்லை ஏற்படுகிறது. இவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற அந்நாட்டு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மலேசிய அரசு சமீபத்தில் பொது மன்னிப்பு அறிவிப்பு வெளியிட்டது. சட்டவிரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டினர் நான்கு மாதங்களுக்குள் தாமாக வெளியேறி விட்டால் நடவடிக்கையில் இருந்து தப்பலாம் என்று வாய்ப்பளித்தது. இதைப் பயன்படுத்தி நான்கு இலட்சம் பேர் வெளியேறினர். அப்படி இருந்தும் மேலும் நான்கு இலட்சம் பேர் சட்டவிரோதமாகக் குடியிருப்பதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இதைத் தொடர்ந்து மலேசிய குடியியேற்ற அதிகாரிகளும், பொலிசாரும் நாடு முழுவதும் அதிரடிச் சோதனையில் இறங்கினர். வெளிநாட்டினர் தங்கியுள்ள பகுதிகள், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான தொழில்கள் நடக்கும் இடங்களில் சோதனை நடத்தினர். நடு இரவிலும் சோதனை நடந்தது. தூங்கிக் கொண்டிருந்த வெளி நாட்டினர்களை எழுப்பி, ஆவணங்களைக் கேட்டுப் பரிசோதித்தனர்.

அப்போது சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 110 பேரை துப்பாக்கி முனையில் கைது செய்தனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படஉள்ளது. இவர்களுக்கு பெரும் தொகை அபராதமாக விதிக்கப்படும். சிறைத் தண்டனை அளிக்கப்படும். அத்தோடு சவுக்கடியும் விழும். சோதனை தொடரும் என்று மலேசிய அதிகாரிகள் தெரிவித்தனர்.


கைது செய்யப்பட்டோரில் ஒரு பகுதியினர்

பொது மன்னிப்புக் காலத்தில் மலேசியாவில் இருந்து 17 ஆயிரம் இந்தியர்கள் வெளியேறினர். இவர்கள் சட்டவிரோதமாக இங்கு தங்கி வேலை செய்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோரின் கடவுச்சீட்டுக் காலாவதியாகி இருந்தது. நான்கு ஆயிரம் பேருக்கு புதிய கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு, நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். என்று மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் கூறினர்.

## ஈராக் தலைநகரில் நீதிபதி சுட்டுக்கொலை



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று நீதிபதியொருவரும், மற்றும் அவரின் சகோதரரான வக்கீலும் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வழக்குகளை விசாரித்து வந்த பாரவிஸ் முகமது என்ற நீதிபதியே அவரது வீட்டுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## ஆப்கானில் நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் பகுதியில் நேற்றுக்காலை 7.50 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 ஆகப் பதிவானது இதில் சில கட்டங்கள்சேதமடைந்தன. உயிர்ச்சேதம் பற்றி உடன் தகவல் ஏதும் இல்லை

## செல்போன் குண்டுகள் மீட்பு!

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிலுள்ள வணிக வளாகத்தில் புடவைக்கடையில் ஜீன்ஸ் மற்றும் சட்டைகள் பொதுமக்கள் பார்வைக்காகத் தொங்க விடப்பட்டிருந்தன. இந்த பேண்ட் மற்றும் சட்டைகளில் 3 செல்போன்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. சந்தேகத்தின் பேரில் அந்த செல்போன்களை எடுத்துப் பார்த்தபோது அவை சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் என்பது தெரியவந்தது. வெடிகுண்டு நிபுணர்கள் உடனடியாக வந்து அந்தச் செல்போன் வெடிகுண்டுகளைச் செயலிழக்க வைத்தனர்.


ஈராக்கில் பாக்தாத்தின் மத்தியில் அமைந்துள்ள ஈராக் இராணுவ முகாம் ஒன்றின் வெளிப்புறத்தில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதல்களின் பின்னர் சேதங்களைப் பார்வையிடும் ஈராக்படையினர். இத்தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டதுடன் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

## தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சதாமைச் சந்திக்க எவருக்கும் அனுமதியில்லை

### -சதாமின் வக்கீல் குற்றச்சாட்டு

(டோக்கியோ)

"தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் சதாம் ஹுசேனைச் சந்திக்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை" என்று அவருடைய வக்கீல் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசேன், தலைநகர் பாக்தாத் அருகே முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளார். சதாம் ஹுசேனின வக்கீலாக ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த ஜியாத் கசாவ்னே என்பவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

ஜப்பான் நாட்டுக்கு வந்துள்ள வக்கீல் ஜியாத், தலைநகர் டோக்கியோவில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் எந்த வித வசதியும் இல்லாத சிறிய அறையில் சதாம் அடைக்கப்பட்டு இருப்பதாகக் கூறினார்.


சாதம் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது? என்பது கூட அவருக்குத் தெரியாது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை உள்ளிட்ட எந்தவித தகவல தொடர்பு வசதியும் அவருக்குச் கொடுக்கப்படவில்லை. வக்கீல் உறவினர்கள் உட்பட யாவரையும் அவர் சந்திக்க அனுமதிக்கப்படுவது இல்லை.

சதாம் மீது விசாரணை நடத்தும் தனி நீதிமன்றம் சர்வதேச சட்ட விதிகளின்படி அமைக்கப்படவில்லை. அங்கு வழக்கு விசாரணை நியாயமாக நடைபெறும் வாய்ப்பு இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.


பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் (இடது) ஐ.நா செயலாளர் கொபி அனானை பலஸ்தீனிய அதிகாரத்திற்காதரவாக லண்டனில் நடைபெற்ற கலந்துரையாடலிற்காக லண்டன் வந்தடைந்ததும் வாழ்த்துகிறார்.

### - அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மீது -

## கைதிகள் துன்புறுத்தப்பட்டமைக்கு எதிராக இரு மனித உரிமை அமைப்புக்கள் வழக்குத் தாக்கல்



(வோஷிங்டன்)

ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் மோசமாக துன்புறுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் மீது முன்னாள் அமெரிக்க மேல் நீதிமன் றத்தில் இரு மனித உரிமை அமைப்புக்கள் வழக்குத்தாக்கல் செய்துள்ளன. ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி சாதம் ஹுசேன் ஆட்சியை அகற்றியது. இந்தப் போரில் பிடிபட்ட ஈராக் இராணுவத்தினரை சிறையில் அடைத்து அவர்களைச் சித்திரவதை செய்து, அந்தக் கைதிகளை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்த காட்சிகள் பத்திரிகைகளிலும் வெளியானது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குப் பல்வேறு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அமெரிக்கா இதற்கு வருத்தம் தெரிவித்ததுடன், சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுத்தது. சில இராணுவ அதிகாரிகள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் மீது இது தொடர்பாக அங்குள்ள மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது. இரு மனித உரிமை அமைப்புகள் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளன.

ஈராக்கிலும்,ஆப்கானிஸ்தானிலும் பிடிபட்டு சித்திரவதை செய்யப்பட்ட எட்டுக் கைதிகள் சார்பாக இந்த வழக்கை அவர்கள் தொடர்ந்துள்ளனர். உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் அந்த எட்டுப் பேரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கைதிகளை சித்திரவதை செய்வதற்குப்பாதுகாப்பு அமைச்சுதான் முழுப் பொறுப்பு அமெரிக்க வீரர்களுக்கு அவர்தான் உத்தரவைப் பிறப்பித்தார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் மனித உரிமை ஆணைக்குழுக்கள் கூறியிருக்கின்றன.

## மனித உரிமை மீறல் நிலை மோசம்; பாகிஸ்தான்,சீனா மீது அமெரிக்கா சாடல்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான், சீனா, வங்களா தேசம், நோபாளம் ஆகிய நாடுகளில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுகின்றன என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

வெளிநாட்டுப்பிரிவின் வருடாந்த மனித உரிமை அறிக்கையில் அமெரிக்கா கூறி இருப்பதாவது,

பாகிஸ்தானில் அரசியல் உரிமை மிகக் குறைவாகவே உள்ளது. பத்திரிகைச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மதச்சிறுபான்மை மக்களிடம் பாரபட்சம் காட்டப்படுகிறது. வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்பு ஆகியவற்றில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள்,ஷியா முஸ்லிம்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள்.

சீனாவில் உள்ள திபெத்தில் மனித உரிமை மிக மோசமாக வுள்ளது. இந்த நான்கு நாடுளிலுமே சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இருளில் நடக்கும் குருடனைப்போல் செயற்படும் சந்திரிகா அரசு விரைவில் வீழ்ந்துவிடும்!

ராவய சிங்கள வாரஇதழ்
விக்டர்ஜவன்
மொழியாக்கம்.அ.சக்திவேல்

இப்பொழுது இலங்கை நாடு பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. அரசாங்கம் வெகு விரைவில் மாறும் அறிகுறிகள் தென்படுகின்றன. இது அரசாங்க கட்சிக்கு ஏற்படும் அழிவு மட்டுமல்ல, கட்சி அமைப்புக்களினால் ஏற்பட்டுள்ள பிழைகளின் காரணமாகும், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் அணுகுமுறைகள் பிழையானதாலும், இந்த அழிவுகள் ஏற்படப் போகின்றன. இது அரசியல் நாகரிகமற்ற ஒரு நாட்டில் ஏற்படும் அரசியலுக்கு சமமானதென எம்மால் கருதப்படுகின்றது. மக்களால் சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை, சனாதிபதி அவர்கள் ஜே.வி.பி யினதும், பிரதம நீதி அரசரினதும் அனுசரணையுடன் கலைத்து விட்டார். இந்தக் கலைப்புக்கு மக்கள் தங்கள் பலமான எதிர்ப்புக்களைக் கிளப்பவில்லை. அத்துடன் அன்றைய ஆட்சித் தலைவர் இதைப்பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளவும் இல்லை.



ஆகவே எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்து இந்தப் புதிய அரசாங்கத்தை நிறுவினர். இந்தக் கூட்டமைப்புத் தேர்தல் வெற்றிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாட்டில் ஆட்சி புரிவதற்கல்ல, கொள்கை அளவில் ஜே.வி.பி யும் சிறிலங்கா, சுதந்திரக்கட்சியும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டதாகும். தன்னை அரசியலில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கே சந்திரிகா அம்மையாருக்கு ஜே.வி.பி யின் அரசியல் அனுசரணை தேவைப்பட்டது. அதேநேரத்தில் ஜே..வி.பி யினர் சந்திரிகா அம்மையாரை விழுங்கி அவரை அரசியல் அநாதை யாக்கி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விழுங்கி விடுவதற்குத் திட்டமிட்டிருந்தனர். இந்த இரு கட்சியினரும், மக்களுக்குக் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வாரி வழங்கினார்கள். ஆனால் அதை அவர்களால் செயற்படுத்த முடியாமல் போயிற்று.



இன்று நாட்டின் இனப்பிரச்சினை முக்கியமானதொன்றாகும். இரண்டாவது திறந்த பொருளாதாரக் கட்டமைப்பு விடுதலைப்புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செயற்படுத்த முடியாத நிலைக்கு அரசின் அணுகுமுறை தோல்வி கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டைக் காட்டிக் கொடுத்து, புலிகளுக்குப் பிரித்துக்கொடுக்கும் ஒரு சதித்திட்டம் என எண்ணியது. திறந்த பொருளாதாரக் கொள்கையை இந்த அரசு முற்றாக நிராகரித்தது. இது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட செயல் அல்ல. ஜே.வி.பியால் ஏற்படுத்தப்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூலம் செயற்படுத்தப்பட்டதாகும்.

இதனால் வடக்கு-கிழக்கு பாதிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளுக்கு எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. அவர்கள் முன்பு இருந்ததை விட அவர்களின் அணுகுமுறையால் தற்பொழுது பிரகாசம் பெற்றுள்ளனர். அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய பின் ஜே.வி.பியை மாற்றியமைக்க முடியுமென கணிப்பீடு செய்தது. .ஆனால் ஜே.வி.பி தனது கொள்கைகளிலிருந்து விலகாதபடியால் அரசாங்கம் முன்னுக்கோ, பின்னுக்கோ செல்ல முடியாத நிலையில் உள்ளது. சனாதிபதி சந்திரிகா அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தனது பதவியையும், கட்சியையும் காப்பாற்றுவதற்கே முயற்சிகளை மேற்கொண்டார். அதன் பிறகு ஜே.வி.பி யினருக்கு கோமாளி வேஷம் போடுவதெனத் திட்டமிட்டிருந்தார். ஆனால் இதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் போதிய பெரும்பான்மை இல்லாதபடியால் சனாதிபதியின் பலவீனத்தை உணர்ந்த ஜே.வி.பி அவரை ஒரு கைப்பொம்மையாக வைத்திருக்கும் திட்டத்தை ஆரம்பித்தது. தாம் சொல்வதை செயற்படுத்தாவிட்டால் சனாதிபதிக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவதுடன் தமது கட்சியின் முழு ஆதரவையும் மகிந்தராஜபக்ஷவுக்கு வழங்கப்போவதாக தற்பொழுது சனாதிபதியை ஜே.வி.பி மிரட்டி வருகிறது. ஆப்பு இடுக்கில் வால் சிக்கியுள்ள குரங்கின் நிலைக்குச் சமமாக இப்பொழுது சனாதிபதியின் செயற்திட்டம் இறுகிப்போயுள்ளது. ஜே.வி.பி யை விட்டு சனாதிபதி விலக முடியாது. சனாதிபதியை விட்டு ஜே.வி.பி யினரும் விலக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இவர்கள் இருவரினதும் கைகள் தத்தமது பிடியில் இருந்து விலகினால் அரசாங்கம் இல்லாமல் போகும். ஆட்சி கவிழும். பின் தேர்தலுக்குச் சென்றால் ஜே.வி.பி யின் பலம் குறைந்து விடும். மற்றது ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாதென சனாதிபதிக்கு நன்றாகத் தெரியும். அப்படி அவர் இணைந்தால் ஐக்கிய தேசியக்கட்சியின் அபிநயத்திற்கு அவர் ஆட வேண்டி வரும்.

இவைகளை உணர்ந்துள்ள சனாதிபதி பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் ஆசிர்வாதத்துடன் மூன்றாவது திட்டத்தைத் தீட்டுவதில் தற்பொழுது செயற்பட்டு வருகின்றார். அது சாத்தியப்படுமா? என்று தெரியாது. பாராளுமன்ற அங்கத்துவத்தை இழக்காமல் எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து ஜே.வி.பி யினரின் அனுசரணை இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சியில் தனக்கு ஆதரவாளர்களை இணைத்துக்கொண்டு ஆட்சியை நீடிப்பது இவரின் குறிக்கோளாகவுள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை தம் வசம் இணைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளினால் அதைச் செய்ய முடியாது. அதற்கு ஜே.வி.பி யினரும் மகிந்தராஜபக்ஷவும் இடம் கொடுக்க மாட்டார்கள்.

சந்திரிகா அரசியல் நெருக்கடியை சந்தித்திருந்த வேளையில் சுனாமிப் பேரனர்த்தங்கள் ஏற்பட்டது. இந்த சுனாமிப் பேரலை சந்திரிகாவுக்கு அரசியலில் மேலும் சரிவை ஏற்படுத்தியுள்ளது. ஜே.ஆர் ஜெயவர்த்தனா யுகத்தில் இருந்து இன்றுவரை நன்மையான செயல்கள் இந்த நாட்டில் ஏற்படவில்லை. தீய செயல்களே இந்த நாட்டில் ஏற்பட்டவண்ணமுள்ளன. ஜே.ஆர். ஜெயவர்த்தன தனக்கு ஏற்ப நாட்டின் யாப்பை ஏற்படுத்திக்கொண்டதுடன், சட்டத்தையும் தனக்கேற்றபடி அமைத்துக் கொண்டார். தேர்தல் முறைகளில் பல சீர்கேடுகளை ஏற்படுத்தி வெற்றி கொண்டார். அரசியலை சாக்கடையாக்கினார். நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தினார். பிறநாட்டு இராணுவத்தை வரவழைத்து விடுதலைப் புலிகளை அடக்குவதற்குத் திட்டமிட்டார். அதில் அவர் படுதோல்வி கண்டார்.




பின் சந்திரிகா பதவியேற்றவுடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு இருந்த பெரும்பான்மை அவரிடம் இருக்கவில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆடிய பைத்தியக்கார நாடகத்தை விட ஒரு மடங்கு மேலதிகமாக சந்திரிகா ஆடினார். தேர்தல் முறைகளில் விளையாடினார். நீதிமன்றத்தை தனது கைப்பொம்மை யாக்கினார். இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கினார். ஜே.வி.பியுடன் இணைந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்து அதிகாரத்தைக் கைப்பற்றினார். பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி நாட்டின் மக்களை ஏமாற்றினார். மக்களையும், நாட்டையும் திசை திருப்பினார். சுனாமிப் பேரலைக்குப் பின் நாட்டின் இனப்பிரச்சினை முன்னரை விட தற்பொழுது அதிகரித்துள்ளது. நாட்டின் இனப்பிரச்சினையும், சுனாமி பேரலைப் பிரச்சினையும் நாட்டில் மீண்டும் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தப் போகிறது. சந்திரிகா அரசியல் தலைமைப் பதவியை விட்டு விலக வேண்டும். இல்லையேல் நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைவியாக மாற வேண்டும். இதை அவரால் செய்ய முடியாது. அந்தப் பரந்த மனப்பான்மை அவரிடம் கிடையாது. அதன் பிறகு தென்னாபிரிக்க அரசியல் நிலையைப் பற்றி அலட்டிக்கொண்டார். நெல்சன் மண்டேலாவைப் பற்றியும், கிளர்ச்சியைப் பற்றியும் கதைக்கத் தொடங்கினார். தன்னை ஒரு மண்டேலாவாக்கி அவரின் கொள்கையைக் கடைப்பிடிப்பேன் எனக் கூறினார். பின்னர் பெரிய அணுகுண்டொன்றைத் தூக்கிப் போட்டார். அதாவது அவர் கடமைகளை மக்களுக்குச் சரிவரச் செய்வதற்கு பெரும் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டால் இலங்கை நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் ஒப்படைக்கப்போவதாக பெரும் அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறினார். நாகரிகமான அரசியல் நாடாக இலங்கையை மாற்ற முடியாதென அவர் பல தடவை செய்தி வெளியிட்டுள்ளார். சரத் என். சில்வா போன்றவர்கள் நாட்டில் பிரதம நீதியரசராக இருக்கும் வரை நாடு உருப்படாது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்டத்தை தனக்குச் சாதகமாக்கி அரசியலில் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதற்கான முழு அனுசரணைகளையும் சரத் என்.சில்வாவிடம் இருந்து பெற்றுக்கொண்டு வருகிறார். சரத் என். சில்வாவும் ஒரு நல்ல மனிதர் அல்ல. சரத் என்.சில்வா மீது பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு முயற்சிகள் பல செய்தும் சந்திரிகா அம்மையார் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அவருக்கு அரச ஊடகங்கள் அனுசரணை வழங்கியபடியால் இன்னும் தனது பிரதம நீதியரசர் பதவியைத் தக்க வைத்துக்கொண்டுள்ளார்.

ஏனெனில் சட்டம் அவர் கையில் இருக்கின்றபடியால். ஊடகங்கள் யாவும் தற்பொழுது மௌனமாக உள்ளன. சிறு குற்றங்களைப் பெரிதாக்கி சிறையில் அடைத்து விடுவார். அப்படிப்பட்ட விடயங்கள் பல இந்த நாட்டில் நடந்த வண்ணமுள்ளன. அரச ஊடகங்கள் பிரதம நீதியரசரோடு கைகோர்த்து இருக்கின்றபடியால் அவரைப்பற்றி விமர்சனங்கள் செய்ய முடியாமல் இருக்கின்றது. இவர் ஒரு பத்திரிகை நிறுவனத்தின் சொத்துரிமை வழக்கையும் அந் நிறுவனத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கினார். சனாதிபதி மற்றும் ஊடக ஆசிர்வாதத்துடன் தனது பிரதம நீதியரசர் பதவியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். நீதித்துறை மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. முழு அரசாங்கமும் இவைகளிற்குப் பதில் கூற வேண்டும். அரசாங்கம் இப்பொழுது இருளில் கண் தெரியாத குருடன் போல் நடந்துகொண்டு திரிகிறது. வெகு விரைவில் இவைகள் யாவும் வெளிச்சத்திற்கு வரும்.

# என்னைப் பாராளுமன்றம் அனுப்பியவர்கள் கோரமாய் கிடந்தது கண்டு துடித்தேன்



**சுனாமி கடல் புவிநடுக்கத்தால் எழுந்த பேரலைகளால் மூழ்கிப்போன முல்லைநகரில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் தனது மீட்பு அனுபவத்தையும் தான் கண்ட காட்சிகளையும் விபரிக்கிறார்.**

## பகுதி-32

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**அ.லோகீசன்**

அன்றைய தினம் நிகழ்வொன்றுக்குச் செல்வதற்காக நான் தயாராகிக்கொண்டிருந்தேன். காலை ஒன்பது மணி மூன்றுநிமிடம் முள்ளியவளை அரசியல்துறைப் போராளி ஒருவர் என்னிடம் வந்து"முல்லைத்தீவு முழுக்க கடல் வெள்ளம் வந்து மூடுப்பட்டுப்போச்சுது. சரியான சேதம் எண்டு அறிவிச்சிருக்கிறார்கள். என்ன மாதிரி எண்டு தெரியாது அண்ணை'' என்று அந்த தகவலை சொன்னார்.



கடல் மு[illegible] தீவுக்குள் வந்து விட்டதோ? எப்ப[illegible] அது நடந்தது. எங்கட நாட்டில் இப்பிடி ஒருநாளும் நடந்ததே இல்லையே முல்லைத்தீவு ரவுண் எல்லாத்தையும் கடல் எப்படி மூடினது அந்தளவுக்கு கடல் வந்தது எண்டுறத என்னால் நம்பமுடியாமல் இருந்தது.

இருந்தாலும் என்ன சம்பவம் எண்டுறத பாப்பம் எண்டு அந்தப் போராளியையும் எங்களோட கூட்டிக்கொண்டு உடனடியாகவே முல்லைத்தீவுக்குப் புறப்பட்டுப்போனோம். நாங்கள் போய்க்கொண்டிருக்க கடல்பக்கமாக இருந்து வாகனங்கள் எல்லா லைற்றையும் போட்டுக்கொண்டு கடல்வருகுது எண்டு கத்தியபடி ஓடிவந்துகொண்டிருந்தார்கள்.

மூன்றாம் கட்டை வற்றாப்பளைச் சந்தியை வந்தடைந்தபோது முல்லைத்தீவுச் சனங்கள் எல்லாம் கால் நடையாக வந்துகொண்டிருந்தார்கள். அவர்களிடம் சம்பவத்தைக் கேட்டபோது தான் எனக்கு முல்லைத்தீவின் நிலை தெரிந்தது.

காயப்பட்டவர்களையும் ஏனையவர்களையும் மீட்பதற்கு வாகனங்கள் தேவை என்பதால் வாகன ஒழுங்குகளைச் செய்யுமாறும் தங்கள் உயிரை கையில் பிடித்தபடி தப்பி ஓடிவருகின்ற மக்களுக்கான தங்குமிடம், உணவு போன்ற ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறும் என்னுடன் வந்த போராளியை எனது வாகனத்தில் அனுப்பி விட்டு நான் சங்கலொறி ஒன்றில் ஏறி சிலாவத் தையை வந்தடைந்தேன்.

லொறியில் இருந்து பார்க்கின்றபோது றோட்டெல்லாம் சனக்கூட்டம் பரிதாபமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து சனங்கள் இடம்பெயர்ந்து வந்ததுமாதிரி றோட்டு முழுக்க சனமாக இருந்தது.

சிலாவத்தையில் நாங்கள் போய் இறங்க அங்குநின்றவர்கள் "தீர்த்தக்கரையில் தான் காயப்பட்ட ஆக்கள் கனக்கப் பேர் இருக்கினம்'' என்றார்கள். நான் அந்த லொறியையும் கொண்டு தீர்த்தக்கரை நோக்கிப் போனேன். ஒருகட்டத்தில் வாகனம் போக முடியாதபடி தண்ணி நிண்டது. அதால நாங்கள் இறங்கி நடந்து தீர்த்தக்கரை மேடையை சென்றடைந்தோம். அந்த மேடைக்குப்போன போது அங்கு மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த மக்களைப் பார்க்கின்றபோது கடலிலே இருக்கிற மீனை வலைபோட்டுப் பிடித்து இழுத்துவந்து கரையிலே போடுகின்ற போது மீன்கள் எல்லாம் எப்படித் துடிக்குமோ அதேபோலஅந்த மக்களும் துடித்துக்கொண்டிருந்தார்கள். அந்தளவு பரிதாபமாக இருந்தது. அந்த மக்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்பதே எனக்குத் தெரியாமல் இருந்தது.

அந்த இடங்களில் இருந்த காயக்காரரை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தேன். காயப்பட்டவர்களைப் பார்க்க முடியாது. ஒவ்வொரு காயத்தையும் பார்க்கின்றபோது எனது கழுத்தை நெரிப்பது போல இருந்தது. அந்தளவுக்குக் காயத்தின் தன்மை இருந்தது. பெரும் கிழியல் காயங்கள். சிலரது மண்டை பிளந்துபோய் இருந்தது. சிலரது கால்கள், கைகள் எல்லாம் முறிந்து போய் வீங்கியபடி இருந்தது. கம்பிகள், கருக்குகள் போன்றன கிழித்த நிலையில் பலர் இருந்தார்கள். இத்தனைக்கும் மேலாக என்னை மிகவும் விரக்திக்குள் தள்ளிய சம்பவம் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் நெஞ்சிலிருந்து வயிறுவரையும் கிழிந்த நிலையில் இருந்தார். அவரது அந்தக் கிழியல் காயத்துக்குள் கஞ்சல்குப்பைகள் எல்லாம் அடைந்துபோய் இருந்தது. அந்த மனிதரது வேதனை எப்படியிருந்திருக்கும். அவர் வேதனையால் துடித்தபடியிருந்தார்.

இப்படியாக கண்ணால் பார்க்க முடியாத மிகவும் பயங்கரமான காட்சிகளை எல்லாம் பார்த்து வெம்பியபடி கள்ளப்பாட்டுக் கிராமத்துக்குப் போய்க்கொண்டிருந்தேன். அந்த இடத்தில் தண்ணி அதிகமாக இருந்தது. எந்தப் பக்கத்தாலும் போக முடியாமல் இருந்தது. ஆனால் உள்ளுக்கு காயக்காரரையும் இறந்தவர்களையும் காவிக்கொண்டு போராளிகளும், சில பொதுமக்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுடன் இணைந்து நானும் அந்த மக்களைக் காப்பாற்றுகின்ற பணியில் ஈடுபட்டுப் பலரை மீட்டெடுத்துக்கொண்டிருந்தோம். கள்ளப்பாட்டைப் பார்க்கின்ற பொழுது பயங்கரமாக இருந்தது. மக்கள் நெரிசலாக குடியிருந்த இடத்தில் ஒரு குடிசைகளும் இல்லாமல் இருந்தது.

இப்படி இருக்க கடல் தண்ணியோடு அடிபட்டு உயிர்தப்பின ஆக்கள் எல்லாரும் உடுப்பில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் எதுவுமே இருக்கவில்லை. அதனால மனோகரன் என்ற தபால் பியோனைக் கூப்பிட்டு இந்த சனங்களுக்கான உடுப்புகளை முள்ளியவளைப் பக்கம் போய் சேர்த்து வருமாறு கூறி அனுப்பிவிட் டேன். அவர் சேர்த்துக் கொண்டு வருவதற் கிடையில் போராளிகளும் உடுப்புகளை சனங்களுக்குக் குடுதது்க்கொண்டிருந்தார்கள்.

சில பகுதிகளில் கனக்கத்தண்ணி நிண்டதால எங்களால போக ஏலாமல் இருந்தது. அந்த இடங்களுக்கு எப்படிப் போவது எண்டு யோசிச்சுக்கொண்டிருக்க கடற்படைப் போராளிகள் அணிஅணியாக வந்து குவிந்து தண்ணிக்குள்ளால நீந்திப் போய் காயக்காரரை மீட்டுக்கொண்டுவந்து எங்களிட்டத் தந்தார்கள். நாங்கள் இஞ்சால கொண்டு வந்து ஆஸ்பத்திரிக்கும் முகாம்களுக்கும் அனுப்பிக் கொண்டிருந்தோம்.

கள்ளப்பாட்டில் இருந்து காயப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் மீட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது எனக்கு மனம் வெதும்பிக்கொண்டிருந்தது. ஏனென்றால் யாழ்ப்பாணத்தின் தரைப் பாதைகள் எல்லாம் படையினரால் தடை செய்யப்பட்டிருந்த பொழுது கிளாலிக்கடலால் நேவிக்காறனுக் கெல்லாம் சுழிச்சு துணிஞ்சுநிண்டு சனத்தை ஏத்தி இறக்கின கெட்டித்தனமான பட கோட்டிகள் பலர் கள்ளப்பாட்டில தான் இருந்தினம். அவையள் கூட காயப்பட்டும் செத்துப்போயும் கிடந்ததைப் பார்க்க என்னால் தாங்கமுடியாமல் இருந் தது கடலில எத்தனை சாதனைகளை எல்லாம் படைத்தவர்களை எத்தனை தரம் கடலை வென்றவர்களை அன்று அவர் களின் உயிரை, உறவுகளை, உடமைகளை எல்லாம் சேர்த்துக் கடல் குடித்து வென்று விட்டது. இந்தப் பெரும் அவ லம் நடந்த நேரம் வாகன வசதிகள் தட்டுப்பாடாக இருந்தது அந்தத் தட்டுப் பாட்டைப்போக்குவதற்கு ஏற்றாற் போல எல்லாப்பகுதி மக்களும் ஒன்று சேர்ந்து தங்களுடைய உழவு இயந்திரங்களை, லொறிகளை மற்றும் தம்மிடம் இருந்தஅனைத்து வாகனங்களையும் கொண்டு வந்து மக்களுக்கு உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். பாதிக்கப்பட்டுப் போய் இருந்த மக்களுக்கு எல்லா மக்களும் சேர்ந்து உதவி செய்து கொண்டிருந்தார்கள்.

சம்பவத்தில் இருந்து தப்பி முகாம்களில் இருப்பவர்களின் நிலை பற்றி பார்த்து அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக வித்தியானந்தாப் பாடசாலைக்குப் போனேன். அங்கு போனபோது தலை சுற்றியது ஒரே அழுகுரல் தான் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது.

பாடசாலை மண்டபங்கள் எல்லாம் சடலங்களால் நிறைந்து போய் இருந்தது. சில சடலங்களை பலர் சேர்ந்து கட்டித்தழுவி அழுது கொண்டிருந் தார்கள். அதேபோல பல சடலங்களை ஓரி ருவர் கட்டித்தழுவி அழுதுகொண்டிருந் தார்கள். சில சடலங்கள் யாருமே இல்லாமல் இருந்தன. அந்தக் காட்சிகள் எல்லாமே பயங்கரமாய் இருந்தது. அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்க முடியாமல் இருந்தது.

இப்படியே சடலங்களை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அதற்கான இடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கான் வேலைகளில் மக்களும் போராளிகளும் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

சிங்கள அரசின் முகமூடியை கிழித்தெறிவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். மக்கள் தான் புலிகள், புலிகள் தான் மக்கள் என்று கோசமிட்டு அரச படைகளின் தடைகளையும் கெடுபிடிகளையும் உடைத்துக் கொண்டு நீண்ட தூரம் கால்நடையாக சென்று ஓமந்தையில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் சலிப்பின்றி எனக்காக வாக்களித்து என்னை பாராளுமன்றம் அனுப்பிவைத்த அந்த மக்களை உயிரற்ற உடல்களாகவும் நிர்க்கதியான நிலையிலும் கண்டு துடித்தேன். பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் எந்தளவில் கிடைத்தது? மக்களின் தற்போதைய நிலை எப்படி? என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி எங்களுடன் பகிர்ந்த விடையங்களை அடுத்த பகுதியிலும் தருகின்றோம்.

தொடரும்.......



# பண்டாரநாயக்கா குடும்பத்தை அரசியலிலிருந்து நீக்க முயற்சி

## ஐ.தே.க.மீது அனுரா குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியினர் பண்டாரநாயக்கா குடும்பத்தை அரசியலிலிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சிப்பதாக சுற்றுலாத் துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த முயற்சிக்கு இலங்கையில் உள்ள தனியார் ஊடகங்களும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் குற்றுச்சாட்டினை முன் வைத்துள்ளார்.

இலங்கையில் செயற்படும் தனியார் ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினர்களாலும் நெருங்கிய நண்பர்களாலும் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.ஊடகங்கள் நாட்டின் தலைவரைத் தீர்மானிக்கக் கூடாது என்றும், மக்களே தமது தலைமையைத் தீர்மானிக்க வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பதை தீர்மானிப்பதற்கு சில தனியார் ஊடகங்கள் முனைப்புக்காட்டுவதாவும் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையினை தீர்மானிப்பதற்கு அரசாங்க ஊடகங்கள் ஒருபோதும் முயலவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் பதவி தனக்குத் தேவையில்லை என்று கூறியதாலேயே மகிந்த ராஜபக்ஷவிற்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், சனாதிபதி தன்னிடம் பிரதமர் பதவியினை ஏற்றுக் கொள்ளுமாறு கோரியதாகவும், தான் அதனை நிராகரித்ததாகவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நாட்டை ஆள்வது தவறான முன்னுதாரணமாகிவிடும் என்பதால் தான் பிரதமர் பதவியினை ஏற்க மறுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேபோன்று தொடர்ந்தும் தான் தியாகம் செய்யப் போவதில்லை என்று தெரிவித்த அவர் கட்சியின் முக்கிய பதவி ஒன்று வெற்றிடமாகும் பட்சத்தில் தான் அதற்குப் போட்டியிடப் போவதாகவும் அனுரா கூறினார்.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக தான் அறிவிக்கப்படவேண்டும் என்பதையே அனுரா பண்டாரநாயக்காவின் இந்த உரை எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கவேண்டுமென பல தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது (32)

# வட கிழக்கு மாகாண - தமிழ் மொழி மூல பாடசாலைகளிற்கு 612 ஆசிரியர்கள் நியமனம்

வடக்குக் கிழக்கு மாகாண தமிழ்மொழி பாடசாலைகளில் கடமையாற்றவென அறுநூற்று பன்னிரண்டு ஆசிரியர்கள் நேற்று முன் தினம் முதல் சேவையில் இணைந்துள்ளனர்.

கடந்த ஆடி மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப்பரீட்சையின் மூலம் இவர்கள் தெரிவாகியிருந்தனர். இதனடிப்படையில் இவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் மூன்றாம் வகுப்பின் இரண்டாம் தரத்திற்கு நேரடியாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். இவர்கள் ஆங்கிலம், ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, கடற்றொழில், கணிதம், விஞ்ஞானம் உட்பட்ட கலைப் பாடத்திட்டங்களுக்கு நியமனம் பெற்றுள்ளனர். இதேவேளை மேலும் 388 ஆசிரியர்கள் விரைவில் நியமனம் செய்யப்பட வுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (32)

# 15 கொள்கைகளடங்கிய நிகழ்ச்சி நிரல் ஐ.தேசியக் கட்சியால் வெளியீடு

(கொழும்பு)

மக்களின் இணக்கத்தைப் பெறும் நோக்கத்துடன் பதினைந்து கொள்கைகள் அடங்கிய நிகழ்ச்சி நிரல் நேற்று முன்தினம் முதல் மக்களின் கருத்துக்களை அறிவதற்காக வெளியிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமுதாய மேம்பாட்டிற்கான தேசிய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பகிரங்க விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் ஆரம்பக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டதனால் நாடு மிகவும் பாதிப்பை எதிர்நோக்கி உள்ளதாகக் கூறிய அவர், இக்கொள்கைக் திட்டங்கள் குறித்து பொது மக்கள் துறைசார் கல்வி மான்களுடன் ஆராயப்பட்டு இறுதி வடிவம் தயாரிக்கப்படும் இதனை மக்களின் நலனை அடிப்படையாகக கொண்டு உருவாக்கப்படும் நிரந்தர தேசியக் கொள்கையைச் சீர்படுத்தும் முழுமையான பொறுப்பை அரசியல் கடசிகளிடம் வழங்கக் கூடாதெனவும் ரணில் விக்கிரம சிங்க கூறியுள்ளார்.

இதனை எவ்வாறு செயற்படுத்துவது? இதனை அரசியல் வாதிகளிடம் ஒப்படைக்க முடியுமா? நாட்டை அழித்தவர்களிடம் இதனை ஒப்படைக்கலாமா? போன்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கிராம சேவகர் கைது

இந்தியக் கடன் உதவித்திட்டத்திற்கமைய இலங்கைக்கு கிடைத்த ஒரு தொகுதி கூரைத் தகடுகளை இரத்தினபுரி-காவத்தைப் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதனுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் கிராம சேவையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக காவத்தைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக நில்லயமொன்றிற்கு கூரைத் தகடுகளை விற்பனை செய்யமுயன்ற போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஐ.தே.க.வின் பிரேரணைக்கு

# சு.க, மு.கா ஆதரவு ஜே.வி.பி எதிர்ப்பு

வடமேல் மாகாண சபையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தை ஜே.வி.பி எதிர்த்து வாக்களித்தது. மக்கள் நலன் கருதி எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் திட்டத்திற்கு ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆதரித்து வாக்களித்தன. ஜே.வி.பி அதனை எதிர்த்து வாக்களித்தது.

எனினும் குறிப்பிட்ட திட்டப்பிரேரணை நிறைவேறியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி யினருக்கும் இடையிலான முறுகலின் காரணமாகவே ஜே.வி.பி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை எனக் கருதப்படுகிறது. (32)


# காணவில்லை



## விஸ்வநாதன் சிவகுமார்

ஆறாம் கட்டை, அம்பாள்புரம், வவுனிக்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட விஸ்வநாதன் சிவகுமார் (வயது 14) என்பவரை 22.02. 2005 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. சாம்பல் கலர் அரைக்காற் சட்டையும், பச்சைக்கலர் சின்ன செக் போட்ட 1/2 கை சேர்ட் அணிந்திருந்தார். இவரைக் காண்பவர்கள் மாங்குளம் காவல்துறையுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:-
தகப்பன் செ.விஸ்வநாதன்.

(5762)


# வீதிக்கடவைகள் அழிந்துள்ளதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

## முறையிட்டும் பயனில்லை பொலிஸ் அதிகாரி விசனம்

(செட்டிகுளம்)

வவுனியா நகர்ப்பகுதியில் வீதிக் கடவைகள் அழிந்திருப்பதன் காரணமாக வீதிவிபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவும் இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தபால் மூலம் நான்குமுறை தெரிவித்தும் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.பி. தென்னக்கோன் தெரிவித்தார். அண்மைய நாட்களாக வீதிவிபத்துக்கள் குறைந்துள்ள போதும் முற்றாக வீதி விபத்துக்கள் இடம்பெறாமல் இருக்க தாம் தற்போது தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் மக்கள் நகர்ப்புறத்தின் சுற்றுவட்டத்தின் ஊடாக வீதியினைக்கடந்து செல்வதாகவும் அவர்களை அவ்வாறு போக வேண்டாம் வீதிக் கடவையினூடாக செல்லுமாறு பணிக்க வீதிக் கடவைகள் இல்லாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வர்ணம் வாங்க நிதிப்பற்றாக்குறை என்று தெரிவிப்பதாகவும், இதன் காரணத்தினால் மக்களை ஒழுங்கான முறையில் வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு கோர முடியாமல் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

# பாடப்புத்தகங்கள் விற்க முற்பட்ட நபர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக அச்சிடப்பட்டிருந்த பாடப்புத்தகங்களை விற்பனை செய்ய முயன்றபோது பொலிசார் அதனைக் கைப்பற்றியுள்ளதுடன் நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்தப் பாடப்புத்தகங்கள் கிலோ கிராம் ஒன்று ஐந்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போதே இவை கைப்பற்றப்பட்டதாக ஹிக்கிராவ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட 661 புதிய புத்தகங்களுள் தமிழ், சிங்கள, ஆங்கிலமொழியிலான புத்தகங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நியூசிலாந்து அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

நியூசிலாந்தின் வெளிவிவகார மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் வில்கொக் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் இலங்கைக்கு வந்த இவரை பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் ஆகியோர் வரவேற்றனர். இதேவேளை சுனாமியால் பாதிப்பிற்குள்ளான. இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு நியூசிலாந்து தொடர்ந்தும் உதவி வழங்குமென அவர் தெரிவித்துள்ளார்.


# பணிநிலை வேண்டுகை

வன்னிப்பகுதியில் இயங்கும் முன்னணி உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. வரவேற்பாளர் - ஆண் :-**
சம்பளம் 7,500.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

**02. பரிமாறுநர் - ஆண் :-**
சம்பளம் 6,000.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

இரு பணிநிலைக்கும் உணவு, தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும்.

தகைமை :-

பணிநிலை - 01

1. தமிழ்,ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்றாக உரையாடத் தெரிந்தவராக இருத்தல்.
2. வாணிபம் பற்றிய வரவேற்பாளர் பயிற்சிநெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பணிநிலை- 02

1. பரிமாறுநர் பணியில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரியும் பணியாளருக்கு மூன்றாண்டு நிறைவுற்றதும் இலவசமாக ஓட்டுநர் பயிற்சி வழங்கி ஓட்டுநர் பணிக்கு அமர்த்தப்படுவார்.

அகவையெல்லை :-
வரவேற்பாளர் :- 55 அகவைக்குட்பட்டவர்.
பரிமாறுநர் :- 35 அகவைக்குட்பட்டவர்.

பணிநிலைக்கான நேர்முகத்தேர்வு 05. 03. 2005 ஆம் நாள் கிளிநொச்சி அம்மன் கட்டடப்பொருள் வாணிபத்தில் நடைபெறவுள்ளது.

தகைமையும், ஆர்வமும், மனவிருப்பும் உடையவர்கள் தன்வரலாறு (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடன் நேரில் சமுகம் தரவும். (5745)

# நேற்றைய யாழ். கண்டனப் பேரணியில் சில காட்சிகள்....























## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் முல்லைத்தீவு

# பணிநிலை வெற்றிடம்

### 01 கிளைமுகாமையாளர்

அமைய அடிப்படையில்

தகைமை:- க.பொ.த. (சா.த)இல் ஆறுபாடங்களில் சித்தியடைந் திருப்பதுடன் கணிதம்/வர்த்தககணிதம்/எண்கணிதம், தமிழ் உட்பட 04 பாடங்களில் விசேட சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் 208/14-3750-70x10-75x10-5200

வயதெல்லை 18 - 45

### 02 விற்பனையாளர்

அமைய அடிப்படையில்

தகைமை :- எட்டாம் வகுப்புசித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- 308/17-3000-55x10-60x10-4150

வயதெல்லை :- 18 - 45

### 03 லொறிப்பாதுகாவலர்

அமைய அடிப்படையில்

தகைமை:- எட்டாம் வகுப்புசித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் :- 308/17-3000-55x10-60x10-4150

வயதெல்லை :- 18 - 45

குறிப்பு:- சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் சுயமாகவே தயாரிக் கப்பட்டு, தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 15.03.2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-11537)



# நன்றி கூறி வரவேற்கின்றோம்

பயிருக்கு நிலம் போல
முல்லைக்குப் பணி செய்தீர்
கண்ணுக்கு இமை போல
துணுக்காயில் செயல்புரிந்தீர்
குறளுக்குப் புகழ் போல
கல்விக்கு வளம் சேர்த்தீர்
செல்லிடமும் தமிழிடமே
செய்நன்றி மறந்து விடோம்.
அஞ்சி நிற்கும் மாணவர்கள்
எச்சத்திலும் எழுந்து நிற்க
பஞ்சமில்லாக் கல்விதனை
பாங்குடனே புகட்டிடவே
மிஞ்சி நிற்கும் கருமம்
கச்சிதமாய்ப் பேணிடவே
முல்லையும் துணுக்காயும்
முழு மனதாய் வரவேற்கும்.

முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களிலிருந்து மாற் றலாகிச் செல்கின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்கள். திரு.த.குருகுலராஜா, திரு.மா.தேவேந்திரன் ஆகியோ ருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவ் வலயங்களுக்கு வருகை தரும் திரு.ப அரியரத்தினம், திரு.மா குரூஸ் ஆகியோரை வரவேற்பதில் மகிழ்வடை கின்றோம்.

இந்நால்வரின் பணி மேலும் சிறக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும்.

தமிழீழக் கல்வி
மேம்பாட்டுப் பேரவை,
முல்லை மாவட்டம்.

(சி.11372)

# வெற்றிக்காகப் போராடுவதிலிருந்து ஓர் அங்குலமும் பின்வாங்கோம்




சோயப் அக்தருக்கு இணையாகப் பந்து வீசும் வீரர்கள் அணியில் உள்ளனர். ஆதலால் அவர் இல்லாத குறையை மற்ற வீரர்கள் சமாளித்து விடுவர் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக்.

இந்திய கிரிக்கெட்சபை பிரசிடென்ட் 11 பேர் அணியுடன் மூன்று நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவதற்காக டில்லியிலிருந்து செவ்வாய்க்கிழமை காலை தர்மசாலா சென்றடைந்தது பாகிஸ்தான் அணி. ஆனால் அங்கு தொடர்ந்து நீடித்துவரும் மழைத்தூறலால் திட்டமிட்டபடி அணியினர் பயிற்சி மேற்கொள்ள முடியவில்லை. அப்போது நிருபர்களிடம் இன்சமாம் கூறியது.

அக்தர் இல்லாதது உணரப்பட்டாலும், அவர் இல்லாத இடத்தைப் போக்கும் விதமான பந்துவீச்சாளர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் அக்தருக்கு இணையாகத் திறமையை வெளிப்படுத்தி ஆட்டத்துக்கு சுவாரஸ்யம் அளிப்பார்கள் என நம்புகிறேன்.

தற்போதைய அணி ஆட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துமா? எனக் கேட்ட போது, போதுமான பந்து வீச்சாளர்களும் துல்லியமாக பந்தை விளாசுபவர்களும் அணியில் உள்ளனர். பின்னர் வேறு என்ன வேண்டும் வெற்றிக்காகப் போராடுவதிலிருந்து ஓர் அங்குலம் கூட எந்த சூழ்நிலையிலும் பின்வாங்க மாட்டோம் என்றார் இன்சமாம்.

# பாகிஸ்தான் சவாலை உறுதியுடன் சந்திப்போம்




பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியை உறுதியுடன் எதிர்கொள்வோமென கங்குலி தெரிவித்துள்ளார்.

"இந்தியா- பாகிஸ்தான் மோதல் என்றாலே சவாலுக்குப் பஞ்சம் இருக்காது இன்சமாம் தலைமையில் தற்போது இந்தியா வந்திருக்கும் பாகிதான் அணி அதிக சவால் நிறைந்தது. ஆனால் உள்ளூரில் நடக்கும் இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் சவாலைச் சந்திக்க இந்தியா தயாராக இருக்கிறது. சொந்த மண்ணில் துடுப்பாட்டத்தில் மட்டுமன்றிப் பந்து வீச்சிலும் சிறப்பான சாதனைகள் செய்திருக்கிறது ஹர்பஜன் மற்றும் கும்ளே ஆகியோர்களின் சாதனைக்கு அளவே கிடையாது இந்திய அணிக்கு தொடர்ந்து ஐந்து ஆண்டுக்கும் மேலாக நான் தலைவராக இருந்து வருகிறேன். இதில் பல்வேறு விதமான சவால்களைச் சந்தித்துள்ளேன். இந்திய வீரர்கள் இந்தக் காலகட்டத்தில் எனக்குக் கொடுத்த ஆதரவுக்கு அளவே கிடையாது.

முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியில் இளம் வீரர் ஹய்ப் இடம்பிடிக்கவில்லை. தமிழக விக்கெட் காப்பாளர் தினேஷ்கார்த்திக் மீண்டும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்.காயம் காரணமாக கடந்த இரண்டு மாத காலமாக ஓய்வு எடுத்து வந்த நம்பிக்கை நாயகன் டெண்டுல்கர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளது தாயக அணிக்குப் பலத்தை அதிகப்படுத்தியுள்ளது. லட்சுமண் ராவிட், ஷேவாக் மற்றும் கங்குலி ஆகியோர்களும் முழுத்தகுதியுடன் பாகிஸ்தான் அணியை சந்திக்கக் காத்திருக்கிறார்கள்.

# நடுநிலை நடுவர்களின் கோரிக்கைக்கு இந்தியாவின் ஆதரவை கேட்கிறது பாக்.



நடுநிலை நடுவர்கள் குறித்த தங்கள் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்குமாறு இந்திய கிரிக்கெட் சபைக்கு வேண்டுகோள் வைக்கிறது பாகிஸ்தான். ஒருநாள் கிரிக்கெட்டில் தற்போதைய விதிகளின்படி களத்தில் இருக்கும் இரு நடுவர்களில் ஒருவர் நடத்தும் நாட்டைச் சேர்ந்தவராகவும், மற்றவர் நடுநிலை நடுவராகவும் இருப்பார். இருவருமே நடுநிலை நடுவர்களாக இருக்கவேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐ.சி.சி க்கு வேண்டுகோள் வைத்திருக்கிறது.

ஐ.சி.சி. நிர்வாகக்குழுக் கூட்டம் வரும் 17-18ஆம் திகதிகளில் டில்லியில் கூடுகிறது இந்தக் கூட்டத்தில் பாகிஸ்தான். கோரிக்கை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. கோரிக்கை நிறைவேற வேண்டுமானால் பெரும்பான்மை ஆதரவு தேவை. ஆதரவு திரட்டும் பணியைத் தொடக்கி விட்டது பாகிஸ்தான். பாக்.கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் கூறுகையில் " இலங்கை, மேற்கிந்தியதீவு, சிம்பாப்பே உள்ளிட்ட பல நாட்டு கிரிக்கெட் நிர்வாகங்களில் ஆதரவு திரட்டுகிறோம். இந்தியா எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் என்று நம்புகின்றோம் என்றார்.

# டுபாய் ஓபன் டென்னிஸ் போட்டி காலிறுதிக்கு முன்னேறினார் சானியா



டென்னிஸ் அரங்கில் மற்றுமொரு சூப்பர் முத்திரை பதித்தார் சானியா மிர்சா டுபாய் டென்னிசில் முன்னணி வீராங்கனை ஸ்வெட்லானா கஸ்னட்சோவாவை வீழ்த்தி, காலிறுதிக்கு முன்னேறினார். முன்னணி வீராங்கனைகள் மோதும் டுபாய் ஓபன் டென்னிஸ் தொடர் டுபாயில் நடக்கிறது. இந்தியாவின் சானியா மிர்சா இந்தத் தொடரில் பங்கேற்கிறார். முதல்சுற்றில்வெற்றிபெற்ற சானியாவுக்கு இரண்டாவது சுற்று பெரும் சோதனைக்களமாக அமைந்தது காரணம்,இரண்டாவது சுற்றில் அவர் எதிர்த்து ஆடியது. யு.எஸ். ஓபன் சம்பியனும், உலகின் முன்னணிவீராங்கனையுமான ஸ்வெட்லானா கஸ்னட்சோவா (ரஷ்யா) சானியா,ஸ்வெட்லானா இடையே நேற்று முன்தினம் மாலை விறுவிறுப்பான ஆட்டம் நடந்தது. தவறுகளே இன்றி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சானியா. விளைவு...? 6-4 என்ற செட்கணக்கில் முதல் செட்வசமானது. இரண்டாவது செட்டில் இன்னும் வேகம் பிடித்தார் சானியா இந்த செட்டும் வசமாக 6-4,6-2 என்ற நேர் செட்களில் ஸ்வெட்லானா கஸ்னட்சோவாவை வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார் சானியா.




## முத்துஜயன்கட்டு பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

முத்துஜயன்கட்டு இடதுகரை, வலதுகரை பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் முறையே கடந்த மாதம் 17 ஆம், 21 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

முத்துஜயன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் கடந்தமாதம் 17 ஆம்திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் பாடசாலை முதல்வர் ந.கருணாகரன் தலைமையில் ஆரம்பமாகியது. பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்ட மேற்படி போட்டி நிகழ்வுகள் மாலை 5.30 மணியளவில் நிறைவு பெற்றது.


அன்றைய போட்டிகளில் யமுனை இல்லம் 508 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும், காவேரி இல்லம் 463 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தினையும், கங்கை இல்லம் 451 புள்ளிகளைப்பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.


முத்துஜயன்கட்டு வலதுகரை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்றது. பிற்பகல் 2.00 மணியளவில் பாடசாலை முதல்வர் சி.பாஸ்கரன் தலைமையில் ஆரம்பமான போட்டி நிகழ்வுகள் மாலை 5.30 மணியளவில் நிறைவுபெற்றது.

இப்போட்டி நிகழ்வுகளில் பங்கு கொண்ட கலைமகள் இல்லம் 604 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும், அலைமகள் இல்லம் 590 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும், மலைமகள் இல்லம் 461 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

போட்டிகளின் முடிவில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகள் வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (து)

# ஸ்பானிஸ் கால்பந்துத் தொடர் கால் இறுதிக்கு முன்னேறியது ஆர்சனல்





ஸ்பெயினில் நடைபெற்று வரும் ஸ்பானிஸ் கால்பந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் பொல்ரயனுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்சனல் அணி வெற்றி பெற்றது.

நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாததால் வெற்றி தோல்வி தண்ட உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் ஆர்சனல் 4-2 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்று கால் இறுதிக்குத்தெரிவானது.

இதற்காக ஆர்சனல் கோல் காப்பாளர் அலன் ருயின் பெரும் பங்காற்றினார். ஆர்சனலிற்காக லூறென், பற்றிக் வியெறிய, பெநடிலுங்ஸ்பேக், அஸ்லி கோல்களை போட்டனர்.

மைக்கல் தெங், கார்லி ஆகியோர் கடினமான போட்டியில் சந்தர்ப்பங்களை வீணாக்கினர். ஆனால் படி கென்னி ஊக்கத்துடன் ஆர்சனலின் வெற்றியைக் காத்தார்.

# 22ஆவது சுப்பர் கிராண்ட் மாஸ்டர் செஸ் காஸ்பரோவை சமாளித்தார் ஆனந்த்

ஸ்பெயினில் உள்ள லினாரசில் 22ஆவது சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆறாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஆனந்த், உலகின் முதல் நிலைவீரரான ரஷ்யாவின் காஸ்பரோவைச் சந்தித்தார். வெள்ளை நிற காய்களுடன் அனந்த் சாதுரியமாக விளையாட,44ஆவது நகர்த்தலில் கா[illegible]ரோவ் சமன் செய்ய ஒத்துக் கொண்டார். தற்போது காஸ்பரோவ் 3.5 புள்ளிகளுடன் மு[illegible]தில் உள்ளார். ஆனந்த் மற்றும் பல்கேரியாவின் வாசலின் தாபலோவ் தல[illegible] புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர்.





இந்தியக்கிறிக்கெட்சபைத் தலைவர் அணிக்கு எதிராக இன்று தொடங்கவுள்ள பயிற்சிப் போட்டிக்காக தர்மசாலாவுக்கு வந்து சேர்ந்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை முதலாவது படத்திலும், பயிற்சியின்போது பந்து வீச்சாளருக்கு அறிவுரைகூறும் அணித்தலைவர் இன்சமாம்உல்-ஹக்கை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கோண்டாவில் கிழக்கு றோ.க.வி மெய்வல்லுனர் போட்டி

கோண்டாவில் கிழக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அதிபர் ஆ.இரத்தினசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.


பிரதம விருந்தினராக பயாக்கோப்பு ஆலய பங்குத்தந்தையும், பழைய மாணவனுமான வணபிதா அருளம்பலம் ஸ்ரீபனும், சிறப்பு விருந்தினர்களாக சு.முத்துலிங்கம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி யசோதா செல்வராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

## கழகங்களுக்கிடையிலான மென்பந்துப் போட்டி சென் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்றது

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆடிய சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் வி.க.4.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சென் அன்ரனீஸ் வி.க.3.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டிகளுக்குநடுவர்களாக பூ.சுபானந், கலாதரன் ஆகியோர் கடமை யாற்றினர்.



## சிந்தனைக்கு

சுதந்திர எழுச்சியின் உந்து தலால்தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கிறது!

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-03-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com


## எச்சரிக்கை அர்த்தமற்றுப் போகையில்...!

விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் மீண்டும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்; யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலாகி விடுமென எச்சரிப்பதும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் யுத்த நிறுத்தத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தலாம; வன்முறைக்கு வழி வகுத்துவிடலாமென எச்சரிப்பதும். வழக்கமானதொன்று எனச் சிறிலங்கா அரசாங்கத்தினால் தற்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் ஒன்றாகி விட்டதுபோல் தெரிகின்றது.

ஏனெனில் அரசபடைகள் மேற்கொள்ளும் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுக்கும் அறிவுறுத்தல்கள் குறித்த அரசாங்கத் தரப்பிலிருந்து தெளிவானதும், விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு (இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில்) உத்தரவாதம் அளிக்கும் உறுதிப்பாடுகள் எதுவும் வழங்கப்படுவதாக இல்லை.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தப்படும் இடங்களின் அண்மையாகவோ அன்றி அப் பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதியிலோ நிலை கொண்டிருக்கும் ஆயுதப் படைத் தரப்பு, எதுவோ, அதாவது இராணுவமோ அன்றி அதிரடிப்படையோ எதுவாகிலும் அதன் அதிகாரி தாக்குதலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என மறுப்புத் தெரிவித்து ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதோடு சரி.

அதாவது விடுதலைப்புலிகள் பாதுகாப்பிற்குத் தாமே பொறுப்பு என்ற வகையிலோ, தாக்குதல் தொடர்பான புலனாய வேண்டிய தேவை அவசியம் உள்ளன என்ற ரீதியிலோ அவை நடந்து கொள்வதில்லை. அதாவது இப் படுகொலைகளுக்கு தாமோ அன்றி அரசாங்கமோ பொறுப்பேற்கவேண்டிய தேவை அவசியம் இல்லை. என்பது போன்று அவை நடந்து கொள்கின்றன.

இந்த வகையிலேயே மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஏனைய போராளிகள் படு கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும், கடந்த சில தினங்களின் முன் மட்டு. அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடப்பட்ட சம்பவம் குறித்தும் அரசாங்கத் தரப்பும், படைத் தரப்பும் நடந்து கொண்டன. அதாவது தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்ற அறிக்கையுடன் நின்று கொண்டன.

இந் நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சூழ்நிலை அபாயகரமானதாகவுள்ளது வன்முறைகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றது என்பதுடன் நின்று கொண்டு விடுக்கின்றதே ஒழிய அதற்கு அப்பால் செல்வதில்லை. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பது இதற்கு ஒரு காரணமாக இருப்பினும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விசாரணைகளும், பதில்களும் திருப்தி அளிக்கும் வகையில் இருப்பதாகவும் கூறுவதற்கில்லை.

அதாவது ஒரு சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்த விதிகளுக்கு உட்படாத விடயங்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கருத்துக்களை வெளியிடுவது பொருத்தப்பாடற்றதெனினும் அச் சம்பவத்தில் யுத்த நிறுத்த விதிகளுக்கு உட்பட்ட விடயங்களில் கூட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கவனம் செலுத்தாமல் விடுவது அன்றிக் கண்டு கொள்ளாது விடுவது அவர்களின் நடு நிலைமை குறித்த கேள்வியை எழ வைக்கின்றது.

எடுத்துக் காட்டாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்கு யார் பொறுப்பு என்ற விடயத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் யார் எனக் கண்காணிப்புக் குழுவால் கண்டறிய முடியாது போனாலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க வேண்டியது அரசாங்கமே என்பதை கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டுவதாகத் தெரியவில்லை.

இந்த வகையில் யுத்த நிறுத்தத்திற்கு ஒரு தரப்பாகப் பொறுப்பேற்க வேண்டிய அரசாங்கமும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கண்காணிப்பாளராகிய யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவும் விடுதலைப்புலிகளின் ஆட்சேபங்கள், எச்சரிக்கைகள் குறித்துக் கைக் கொள்ளும் அணுகு முறையானது வரவேற்கத்தக்கதாக இல்லை.

பாரதூரமாக நிகழ்வுகளின் பின்னரான விடுதலைப்புலிகளின் எச்சரிக்கையை இவர்கள் கருத்திற்கொள்ளாது விடுமிடத்து நிலைமை என்றும் ஒரே மாதிரியாக இருக்கும் எனக் கொள்ளுவதும் தமது நடவடிக்கைகளை அதே வழியில் தொடர்வதும் பொருத்தப்பாடானதொரு அணுகு முறையாக இருக்க மாட்டாது.

ஏனெனில் புலிகளும் சரி, தமிழ் பேசும் மக்களும் சரி சீண்டுதல்களைத் தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்றோ, பொறுத்துக் கொண்டிருப்பதற்கான சூழ்நிலை எவ்வேளையிலும் இருக்கும் என்றோ கூறுவதற்கில்லை. மீண்டும் மீண்டும் விடும் எச்சரிக்கைகள் பெறுமதி அற்றதாகையில் யுத்த நிறுத்தத்தின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் அறிவிப்புக்கள் வெளிவருதல் தவிர்க்க முடியாது போய்விடவும் கூடும்.

# இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாம்!

## -சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



சமஷ்டி முறையை நிறுவுவதன் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருப்பதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முயற்சிக்கப் போவதில்லை .சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற எதிர்காலத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது சிறிலங்கா சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஒரு தரப்பு சமஷ்டி முறைக்கு இணங்கவில்லை . அந்தத் தரப்பினரோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும், அவை வெற்றியளிக்கும் என்றும் நம்புகிறோம். இதற்கு முன்னர் இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலமே தீர்க்க முடியும் என்று கூறியவர்கள் கூட, தற்போது அதனைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கச் செய்யும் அதேவேளை ஏனைய தரப்பினரையும் இணங்க வைப்பதே எமது நோக்கம் . தற்போதைய அரசியலமைப்புக் காரணமாக எந்தவொரு அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியாது. கடந்த வருடம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது 67 வீதமான வாக்குகளே கூட்டமைப்பு அரசாங்கம் பெற்ற போதிலும், குறைந்தபட்ச பெரும்பான்மையையேனும் பெற முடியாமற் போனது. இதன்படி ஐந்தில் இரண்டு வாக்குகளே கிடைத்துள்ளன. உண்மையில் 67 வீதமான வாக்குகளைப் பெற்றவர்கள் 113 இற்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டும என்பது தெளிவாகப் புரிந்த போதிலும், கூட்டமைப்பிற்கு 106 ஆசனங்களே கிடைத்தன. இந்த அரசியலமைப்பு சிக்கலானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தாக்குதல்....

களுக்குக் காரணமானவர்கள் படையினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்களுமே ஆகும். அவற்றிற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவதே பொருத்தமானதாக இருக்குமே தவிர இதற்கொரு விசாரணைக்குழு அமைத்து நீதியான தீர்வு வழங்கப் படுமென்பது எங்களால் நம்ப முடியாதது. இது யதார்த்த பூர்வமானதென நாங்கள் நம்பவில்லை.

இது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுக்கு எங்களுடைய செய்தியையே அனுப்பியுள்ளோம் வாய் மூலமாக தொலை பேசி ஊடாகவே எங்கள் அதிருப்தியை அவர்களுக்குத் தெரிவித்துள்ளோம்.

தொடர்ச்சியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இராணுவத்தரப்பினரின் ஒத்துழைப்போடும் - பங்களிப்போடும் இந்தக் குழுக்கள் படுகொலை முயற்சிகளில் ஈடுபடுவதும் ஒரு நிழல் யுத்தத்தை விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும் எமது மக்கள் மீதும் தொடர்ந்து மேற்கொள்வதும் இந்த யுத்த நிறுத்தச் சூழலைத் தொடர்ந்து பேணுவதற்கு உகந்ததாக இருக்காது. ஒரு பாரதூரமான விளைவுகளையே இவை ஏற்படுத்தும்.

நோர்வே கண்காணிப்புக் குழுவும், நோர்வே அனுசரணையாளர்களும் விரைவில் இதற்கொரு முடிவைஎட்டக்கூடிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

இந்த யுத்த நிறுத்த சூழலைத் தொடர்ந்து பேணுவதாக இருந்தால் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒரு சரத்தில் இது குறித்துத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வட - கிழக்கில் தமிழர் தாயகத்தில் செயல்படுகின்ற ஆயுதக் குழுக்கள் வடகிழக்கில் இருந்து வெளியோற்றப்படவேண்டும். ஆயுதங்கள் களையப்படவேண்டும். இதை இரண்டு தரப்பும் ஒப்பமிட்டு ஏற்றுக் கொண் டுள்ளது.

இதை நடைமுறைப்படுத்தாவிட்டால் யுத்த நிறுத்தச் சூழலைத் தொடர்ந்தும் பேணுவது மிகவும் நெருக்கடியான நிலைமையாகத்தான் இருக்கும் .

நிலைமைகளின் நெருக்கடியை நோர்வேக்கு தெளிவாக்கி உள்ளோம். ஆகவே இப்படித்தொடர்ந்து மேற்கொள்ளப்படுமேயாக இருந்தால் நிச்சயமாக இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குப் பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்துமென சுட்டிக்காட்டியுள்ளோம்.

நாங்கள் ஒருபக்கத்தில் நோர்வே அனுசரணையாளர்களூடாக சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பை நிறுவுவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்.

அதேவேளை இந்தச் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற எங்களுடைய முக்கிய பொறுப்பாளர்கள் மீது இலக்கு வைத்து படைத தரப்பின் ஆதரவோடு படுகொலை முயற்சிகள் இடம் பெறுகின்றன. சுனாமி நிவாரணப் பொதுக்கூட்டமைப்பைக்கூட பலவீனப்படுத்துகின்ற நிலைமைதான் இன்று உருவாகி இருக்கின்றதென நான் நினைக்கின்றேன்.

நாங்கள் ஏற்கனவே பொது கூட்டமைப்புத் தொடர்பாக எங்களுடைய யோசனைகளை; நிலைப்படுகளை நோர்வே அனுசரணையாளர்களினூடாக இலங்கை அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி இருக்கின்றோம். அண்மையிலும் நோர்வேத் தூதுவரும், விசேட தூதுவரும் இங்கு வருகை தந்தபோது எங்களுடைய தெளிவான நிலைப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்துள்ளோம்- அனுப்பியும் உள்ளளோம்.

நோர்வேத் தூதுவர் மீண்டும் இங்கு வந்து எங்களுடன் இது பற்றிப் பேசுவதாக அறிவித்திருக்கின்றார்.

அவர் வரும்போது நாங்கள் கொடுத்த இந்த யோசனைகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக அதற்கான சாத்தியப்பாடுகள் நிறைய உருவாகும் என நினைக்கின்றேன் என்றார்.

## அலையென...

திருமதி.பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன், சுரேஸ் பிறேமச்சந்திரன், ரவிராஜ் மற்றும் மதத் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சிறிலங்கா அரசின் அராஜகப் போக்கைக் கண்டிக்கின்றோம் என்ற பதாகைகளைத் தாங்கியவாறு முன்னே நடந்து சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், உயர்கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் எனப் பெரும் திரளானோர் சுலோக அட்டைகளை ஏந்திய வாறும் கோசங்களை எழுப்பியவாறும் சென்றனர். யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மற்றும் ஏனைய இடங்களில் இருந்து வந்த பேரணிகள் அனைத்தும் நல்லூர் வீதியில் ஒன்றாகச் சேர்ந்து கோசங்களை எழுப்பியவாறும் நகர்ந்த பேரணி யாழ். மாவட்ட அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராயல அலுவல கத்தில் வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளா நாயகம் கொபியனானுக்குரிய மகஜர்களை யாழ். மாவட்ட வதிவிடப்பிரதிநிதியிடம் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவரும், மதகுருமாரும் கையளித் தனர்.

அதனைத் தொடர்ந்து பேரணியாகச் சென்று யாழ். மாவட்ட இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் வைத்து மகஜரை போர்நிறுத்த கண் காணிப்பு குழுவினரிடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் கையளித்தனர். தொடர்ந்து பேரணியாகச் சென்று வெளி நாடுகளுக்கான மகஜரை இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதியிடம் தேசிய எழுச்சிப் பேரவையினரும் இடம் பெயர்ந்த மக்கள் நலன்காப்பகப் பிரதி நிதிகளும் கையளித்தனர். தொடர்ந்து பேரணியாகச் சென்று யாழ் அரச செயலகம் முன்னர் கூடினர்.

அங்கு வைத்து இலங்கை சனாதிபதிக்கு அனுப்ப வேண்டிய மகஜர் பிரகடனத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் வாசித்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டபாராளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கையளித் தார்.

(கா,சு,27,28,33,36,41)


## துப்பாக்கிச்...

தில் காணப்பட்ட நபர் ஒருவர் எங்களை உற்று நோக்கினார். அவரை நாங்கள் கடந்து சிறிது தூரம் சென்றபோது உந்துருளியில் பின் தொடர்ந்து வந்த அவர் எமது ஆட்டோவை வழிமறித்து நிறுத்தச் சொன்னார். சாரதி நிறுத்தாமல் சென்ற சமயம் கைத் துப்பாக்கியைக் காட்டியதையடுத்து பயத்தின் நிமித்தம் சாரதி ஆட்டோவை விட்டு குதித்து ஓடினார். துப்பாக்கிதாரி எங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். காயமடைந்த எங்களை யாரோ வைத்திய சாலையில் கொண்டுசென்று அனுமதித்தனர். முகாமிலிருந்து 200 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தப் பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புகள் இல்லாது விட்டாலும் விசேட அதிரடிப் படையினரின் முகாம் இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. அன்றைய தினம் எமது கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து பட்டிருப்புப் பாலம் வழியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நாங்கள் நுழைந்த சமயம் கூட வழமையான பதிவுகள் அங்கு இடம்பெறவில்லை. வெற்றுத் தாளிலேயே பதியப் பட்டது. இதனையெல்லாம் நோக்கும் போது சிறிலங்காப் படையினரின் ஆதரவுடன்தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பதைத் திட்டவட்டமாக அறியக் கூடியதாக உள்ளது என்றார் அவர். போராளி அகநிலா இந்தச் சம்பவம் தொடர்பாக கூறுகையில்; துப்பாக்கிதாரி உந்துருளியில் தொங்கிக் கொண்டிருந்த சொப்பிங் பைக்குள் இருந்து கைத்துப்பாக்கியை எடுத்து தங்கள்மீது சுட்டதாகக் கூறினார். அந்நபர் சிவப்பு கோட்டு சேர்ட் அணிந்திருந்தார். உடல் பருத்த கறுப்பு நிற மனிதர் என்றும் அகநிலா கூறினார்.

# தோல் பொருள் உற்பத்தி நிலையம் மல்லாவியில் நேற்றுத் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தோல் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்று



நேற்று மல்லாவியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வருமான ஊக்குவிப்பிற்காக சமுதாய முன்னேற்ற நிலையமும், ஐ.ஓ.எம்.நிறுவனமும் இணைந்து ஆரம்பித்துள்ள இப் பயிற்சி நிலையம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நிலையத்தின் பெயர்ப்பலகையினை வன்னிமாவட்ட ஐ.ஓ.எம் நிறுவன இணைப்பாளர் அனுராதரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மண்டபத்தினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் நாடா வெட்டித் திறந்துவைத்தார். (ச)

## போராளி அகநிலாவும் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றம்

அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளியான அகநிலாவும், நேற்று மாலை கொழும்பு அப்பலோ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த ஏனைய போராளிகளான விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி, துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சசிமதி ஆகியோருடன் இவரும் குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினமிரவு மாற்றப்படவிருந்தார். ஆனால் உலங்குவானூர்தியில் இடவசதியின்மை காரணமாக இவர் அழைத்துச் செல்லப்படவில்லை. இதனை யடுத்து தொடர்ந்தும் கல்முனை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த போராளி அகநிலா நேற்று மாலை சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் கொழும்பு அப்பலோ வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்; விசாரிக்க சனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விடு தலைப்புலிகளிள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு ஒன்றை சனாதிபதி நிறுவியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்டதாக அமைக்கப்படும் இந்த ஆணைக்குழு உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள், அதன் பின்னணியில் உள்ள காரணங்கள், நோக்கங்கள குறித்தும் விசாரணை நடத்தி சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். கிழக்கில் நடந்த தாக்கு தல்களில் ஏதாவது ஆயுதக் குழுவிற்கு சம்பந்தம் இருக்கின்றதா என்பது குறித்தும் ஆராயவுள்ள இந்த ஆணைககுழு ஒருமாத காலத்துள் அறிக்கையை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-தம்பட்டை துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்-

## சந்தேக நபருக்கு 16ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு !

(அம்பாறை)

அம்பாறையில் மூன்று பெண் போராளிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பெரிய கல்லாற்றைச் சேர்ந்த ஜோன்சன் ஜெயகாந்தன் (வயது 28) என்ற நபர் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் கல் முனைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் கொடுத்த தகவலொன்றின் பேரில் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு, கல்முனை பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். குறிப்பிட்ட நபர் நேற்று மாலை பொலிஸ் விசாரணையின் பின்பு கல் முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி கே.தட்சணா மூர்த்தி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். எதிர்வரும் 16 ஆம் திகதி அக்கரைப்பற்று நீதி மன்றத்தில் அடையாள அணி வகுப்பு நடைபெறும் என்பதால் அந்த அடையாள அணி வகுப்பில் இவரை ஆஜர்ப்படுத்துமாறும், அதுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உ த்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு மூடிய வாகனமொன்றில் பொலிசாரால் கொண்டு வரப்பட்ட இவர் அங்கிருந்து மீண்டும் பொலிசாரால் அதே போன்று அழைத்துச் செல்லப்பட்டார்.

இவரை மொனராகலை சிறைச்சாலையில் விளக் கமறியலில் வைக்குமாறும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இவர், பாதுகாப்புக் கார ணங்களுக்காக அங்கு கொண்டு செல்லப்படாமல் அந்த நீதிமன்றத்தின் உத்தரவை அமுல்படுத்துவதற் காக கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுகஸ் தோட்டையில் மண்சரிவில் 3பேர் பலி

கண்டி- மாத்தளை வீதியின் கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் நேற்று முற்பகல் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி மூவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காய மடைந்தனர்.

புதிய வீடு ஒன்றை அமைப் பதற்காக தளம் வெட்டிய வேளை யில் உயர் பிரதேசத்தில் இருந்து மண் சரிவு ஏற்பட்டபோது அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த மூவரே உயிரிழந்துள்ளனர்.

### மருத்துவப்...

சுலோக அட்டைகளைத் தாங்கி யிருந்த அவர்கள்,தனியார் மருத் துவக் கல்லூரிக்கான அனுமதியை வழங்க முற்படும் அரசின் செயற் பாடுகளுக்கெதிராகக் கோஷங் களை எழுப்பினர். (36,27)

### போர்நிறுத்த...

சியில் உள்ள போர்நிறுத்த கண் காணிப்புக்குழுச் செயலகத்தில் அதன் துணைத்தலைவர் றொயற் சகவீற் என்பவரிடம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பசுபதிப் பிள்ளை கையளித்தார்.

மகஜரினைப் பெற்றுக்கொண்ட கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவர் இதற்குரிய பதிலை ஒரு வாரத்திற்குள் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார். (கு)


## சாவு அறிவித்தல்

### தர்மசறோஜினி பஞ்சரட்ணம்

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவை சேர்ந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை தர்மசறோஜினி பஞ்சரட்ணம் 28.02.2005 அன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் காலமானார். அன்னாரின் அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் அமைந் துள்ள ஊடக இணைப்புச் செயலகத்தில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று கிளிநொச்சி திருநகர் பொது மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:-
வே.கு.பஞ்சரட்ணம்.
(கணவர்)

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.


(சி.11536)


# போராட்டத்தில் இணைந்த மாணவி பெற்றோரிடம் கையளிப்பு

-ஐ.சி.ஆர்.சி.பிரதிநிதி பாராட்டு

(புதுக்குடியிருப்பு)

பெற்றோர்கள் மகிழ்ச்சியாக உள்ளமை எமக்கு மன நிறைவைக் கொடுத் துள்ளது. விடுதலைப் புலிகளின் இச்செயலையிட்டு நான் பெருமைப் படுகின்றேன் இவ்வாறான சம்பவங்கள் எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது.



இவ்வாறு தாமாக முன்வந்து விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட புதுக்குடியிருப்பைச்சேர்ந்த 18 வயதுக்கு உட்பட்ட மாணவி ஒருவரைப் பெற்றோர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநி மகீ குறிப்பிட்டார்.

இந் நிகழ்வானது நேற்றுக் காலை புதுக்குடியிருப்பில் உள்ள முல்லை மாவட்ட அரசியல் துறைச்செயலகத்தில் இடம்பெற்றது.

குறிப்பிட்ட மாணவியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கான பிரதிநிதி மகீ முன்னிலையில்,முல்லை மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி அவர்கள் பெற்றோரிடம் கையளித்தார். (08)

## நிவாரணப் பணம் வழங்கக் கோரி பலப்பிட்டியவில் போராட்டம்!

அம்பாந்தோட்டை மாவட்டம் பலப்பிட்டிய ரன்தொம்ப பிரதேசத்தில் வசிக்கும் ஐந்நூறு குடும்பங்களுக்கு சுனாமி நிவாரணம் ரூபா இரண்டாயிரம் இதுவரை வழங்கப்படவில்லை. எனவும், இது சம்பந்தமாக அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை என்றும், உடனடியாக இதனைப் பெற்றுத் தரவேண்டும் எனப் பிரதமருக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று முன்தினம் பலப்பிட்டிய அரச அதிபர் காரியாலயத்தின் முன்பாக நடைபெற்றது.


## சாவு அறிவித்தல்

### சதாசிவம் பேரம்பலம்

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், சதாசிவம் பேரம்பலம் வேலணை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தற்போது 707, 7ஆம் யூனிற், இராமநாதபுரத்தில் வசித்து வந்தவருமாகிய சதாசிவம் பேரம்பலம் 01.03.2005 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் சின்னத்தங்கத்தின் அருமைமகனும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை அன்னலெட்சுமியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பகீரதலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற படிகலிங்கம், காலஞ்சென்ற கனகரத்தினம், துரைராசா, சிவசம்பு, கணபதிப்பிள்ளை முருகேசு (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் , காலஞ்சென்ற செய்மோகன ரட்ணம், ரம்மணி, காலஞ் சென்ற தெய்வேந்திரம், பாசுபதம் (கனடா), காலஞ் சென்ற காசிலிங்கம், பன்னீர்ச்செல்வம், பன்னீர்ச்செல்வி, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பேரின்பவதி,கமலாவதி(ஆசிரியை யாழ்ப் பாணம்), அறிவழகி (போராளி கடற்புலிகள் மகளிர் படையணி), அருந்தவராசா( சுவிஸ்), சந்தானலெட்சுமி (ஆசிரியை கிளி.இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா) , ஆனந்தராசா (அமெரிக்கா), பாக்கியலட்சுமி ( நிதி), பாக்கி யராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானசேகரம், நிர்மலகுமார், சியாமா (சுவிஸ்), மனோ ரஞ்சிதன் (அழகன்) , நிகேதரன் (ஆசிரியர் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பா), தயாழினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி, பிரியங்கா, தர்சி, கஜாணன், காஷன், நிருஷன், பிரவனா, நவீனா (சுவிஸ்), பிரசாந்த், துவிதா, நிசாந், அரசி, அழகன், ஜிதுர்சிகன், வினுஷா ஆகியோரின் அன்புப பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 03.03.2005 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இராம நாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

தகவல்:-
(5763) அன்னாரின் குடும்பத்தினர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது